விலை சதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2000, பங்குனி 5 உ செவ்வாய் (18-3 69, துல்ஹஜ் 28 புத்தகம் 23 இதழ் 21





# யூ. என். பிக்குகள் பெரும் வெடிப்பு?

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்து வந்த கோஷ்டிப்பூசல் இப்போது உச்சக்கட்டத்தையடைந்து விட்டதாகத் தெரிகிறது. கடந்த வாரம் மிக நெருக்கடியான கட்டத்தை இப்பூசல் தோற்றுவித்ததாகவும், ஒரு கோஷ்டியினர் அரசாங்கத்திலிருந்து வெளியேறி எதிர்க்கட்சிக்கு சென்று விடும் முடிவுக்கே வந்துவிட்டதாகவும், ஆனால் இறுதி நேரத்தில் கட்சிக்குள் உள்ள நடுநிலைமையாளர்கள் சிலர் இத்தகைய நெருக்கடி ஏற்படாதவண்ணம் தடுப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள் என்றும் தெரிகிறது. எனினும் நீறுபூத்த நெருப்பாக இருக்கும் இப்பூசல் மறுபடியும் பெருமளவில் வெடிக்கலாமென்று அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

ஐ. தே. கட்சிக்குள் இரு கோஷ்டிகள் இருந்துவருவது தெரிந்ததே. இவ்விரு கோஷ்டிகளுக்கிடையேயும் அடிக்கடி மோதல்களும், குத்து வெட்டுக்களும் நடைபெற்று வந்தது பகிரங்க ரகசியம்.

இப்போதல் இப்போது உச்சக்கட்டத்தை யடைந்துவிட்டதாம். மக்கள் செல்வாக்கிழந்து எட்டுப் பேருடன் வீழ்ந்து கிடந்த யூ. என். பிக்கு உயிர் கொடுத்தவர்களையெல்லாம் பிரதமர் புறக்கணித்துவிட்டு கட்சிக்குள் நேற்றுப் புகுந்தவர்களின் விருப்பங்களுக்கெல்லாம் தாளம் போடுவதாக பிரதமரின் எதிர்க்கோஷ்டி நீண்ட காலமாகப் பலத்த குற்றம் சுமத்தி வந்திருப்பதாகவும், பிரதமரின் போக்கில் மாறுதல் எதுவும் ஏற்படாததால் இக்கோஷ்டி

(9-ம் பக்கம் பார்க்க)



நிழலுடன் போராட்டம்

# அரசாங்கக் கொள்கையை முறியடிக்க

## அண்ணு இறுதி யாத்திரை திரையிடவும் தடையா?

பேரறிஞர் அண்ணுவின் இறுதியாத்திரைத்திரைப்படத்தை இலங்கையில் வெளியிடுவதற்கு அரசாங்கம் தடைவிதிக்கலாம் என்று அறியப்படுகிறது. அண்ணுவின் இறுதியாத்திரைத் திரைப் படத்தை இங்கு திரையிடுவதற்குத் திரைப்பட இறக்குமதி நிறுவனம் ஒன்று அரசாங்கத்தின் அங்கிகாரத்தைக் கோரியுள்ளதாகவும், இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை யென்றும் தெரிகிறது.

அறிஞர் அண்ணுவின் இறுதியாத்திரையைத், திரைப்படமாகத் தமிழ்நாடு அரசாங்கமும், மக்கள் திலகம் எம். ஜி. ஆரும் தயாரித்தது தெரிந்ததே. இப்பொழுது இத்திரைப்படம் தமிழ்நாடு முழுவதும் திரையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் அண்ணுவின் இறுதியாத்திரையைத் திரைப்படமாகவேனும் காண்பதற்கு முடியுமா என்று கேட்கப்படுகிறது.

இலங்கையில் ஆர். ஜி. போன்ற சிங்கள இன வெறியர்கள் நடத்தும் துவேஷப் பிரசாரத்துக்கு அரசாங்கம் அஞ்சி, அண்ணு திரைப்படம் காட்டுவதற்கு அனுமதி மறுத்து விடுமோ என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதே நேரத்தில், காந்திஜி, நேரு போன்ற தலைவர்களின் இறுதி யாத்திரைப் படத்தை இலங்கைக்குத் தருவித்து திரையிட்ட இந்தியத் தூதரகம், தமிழ்நாடு அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு அண்ணுவின் இறுதி யாத்திரைப் படத்தை இலங்கையில் திரையிட்டு தமிழர்களின் ஆசையை நிறைவேற்றுமா? அன்றி இதிலும் வடநாடு தென்னுடு என்ற பாகுபாட்டுடன் இந்தியத் தூதரகம் செயல்படுமா என்பதை அறிவதில் தமிழ் மக்கள் அதிக அக்கறை உடையவர்களாக இருக்கிருர்கள்.

## மத்திய வங்கியில் சதி!

இலங்கை மத்திய வங்கி தமிழ் மக்களின் தொண்டைக்குள் தனிச் சிங்களத்தை எப்படியும் திணித்துவிட வேண்டுமென்பதில் கெடுபிடி காட்டி வருவதாக தெரிகிறது. அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை முறியடிக்கும் சதி வேலையிலும் வங்கிமேலிடம் ஈடுபட்டு வருவதாக தெரிகிறது. வங்கியின் இந்த இன வெறிப் போக்கு தொடர்வதால் தமிழ் மக்கள் மிகுந்த பரபரப்படைந்துள்ளனர்.

தனிச் சிங்களத்தில் காசோலை வழங்கப்படுவதற்கு தமிழ் மக்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்திருந்தும் தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு சிங்களத்திலேயே காசோலைகள் வங்கியிலிருந்து அனுப்பப்படுகின்றனவாம்: இதுமட்டுமன்றி தமிழர்களான வங்கி ஊழியர்களுக்கும் சம்பளப்பட்டியல் தனிச் சிங்களத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

அடுத்து, பழைய ஊழியர்களுக்குச் சிங்களமொழித் தேர்ச்சி அவசியமில்லை என்ற அரசாங்கத்தின் கொள்கையை வங்கி அதிகாரிகள் அலட்சியம் செய்து வருவதாகவும், 700ம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைக்கு முரணுக தமிழர்களான உயர்பதவியாளர்களிடமும் சிங்களத் தேர்ச்சி கோரி குட்டிக் சர்வாதிகாரத்தி லீடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது.

அத்துடன், தமிழில் தமது கருமத்தைச் செய்பவர்களை ஊக்குவிப்பதையும் வங்கி மேலிடம் விரும்பவில்லையாம். இதுவும், தமிழ் மக்கள் தமிழில் தமது அலுவல்களை ஆற்றலாம் என்ற

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

நமது தொடர்கதை

# எங்கே நீ போனா நானும் அங்கே உன்னோடே!

## அத்தியாயம் (10)

**சில** நிமிட நேரத்துக்குள் தன்னிலையிழந்துவிட்ட அவன் தன் செயலுக்காக வெட்கிப் போனான். இவ்வளவு சீக்கிரத்தில் ஒரு பெண்ணினது அழகு தன்னை நிலைகுலையச் செய்யும் என அவன் எதிர்பார்க்கவேயில்லை.

ஒருபடியாகத் தன்னைச் சுவீகரித்துக் கொண்டு 'இல்லைத் தங்கச்சி தங்கச்சிலை போன்ற உன்னைவிட்டுப் பிரிய அந்தக் கயவனுக்கு எப்படி மனம் வந்தது என்று என்னை மறந்த நிலையில் யோசித்து விட்டேன். அது தான் அப்படிஉன்னை இமைக்காமல் பார்க்கவேண்டி ஏற்பட்டது' என்று பேசிக் கொண்டே தன் கையில் இருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான், இரண்டு பத்து ரூபா நோட்டுக்களும்மூன்று இரண்டு ரூபா நோட்டுக்களுமாகஅவனிடம் எல்லாமாக இருபத்தியாறு ரூபாய்கள் இருந்தன. பயணத்திற்குப் போதுமான பணம் இருக்கிறது என்ற திருப்தி ஏற்பட்ட போதும் தன் தங்கைக்குஒரு மாற்றுப் புடவை வாங்கிக் கொடுக்க பணம் போதாது என்பதை எண்ண அவனுக்குத் துக்கமாகஇருந்தது.

நனைந்து நனைந்து வளவுக்குள் நிரம்பி நின்ற மழைநீரை வாய்க்கால் வெட்டி அப்புறப்படுத்தியதைத் தன் படுக்கையறை ஜன்னலில் நின்றுபார்த்துவிட்டு அடுத்த நாள் மழை விட்டதும் அவன் வளவுக்குள் வரும் வரை காத்திருந்து 'அப்பப்பா நேற்று என்னமா மழையில் நனைந்தீர்கள்... எனக்கென்றால் ஜன்னிபிடித்திருக்கும்... உங்களுக்குத் தடிமல் கூடப் பிடிக்கவில்லையா...? இரவு முழுவதும் உங்களைப்பற்றி நான் எவ்வளவு பயந்திருந்தேன் தெரியுமா...? இனிமட்டும் என் கண்முன்னால் நீங்கள் அப்படியெல்லாம் நனையக் கூடாது... ஆமாம்! அதைப் பார்த்துக்கொண்டு என்னால் கவலைப்படாமல் இருக்கவும் முடியாது, தெரிஞ்சுதா...?' என்று குழந்தை போல சிணுங்கிக் கொண்டு அன்புக் கட்டளையிட்ட போது அவன் வாய்விட்டே சிரித்தான்.

அந்தச் சிரிப்பு அவளுக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியிருக்க வேண்டும் 'உங்க உடல் கல்லால் செய்யப்பட்டது என்ற எண்ணமாக்கும்?' என்று அவள் குமுற 'இல்லை உமா என் உடல் இரும்பால் ஆக்கப்பட்டுள்ளது' என்று மறுத்துக் கூற அவள் அவனுடன் கோபித்துக்கொண்டுதிரும்பிப்போக ஓரடியெடுத்து வைக்க ''எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு'' என்ற பாட்டை அவளுக்குக் கேட்கும்படி அவன்பாடியதும் அவள் தன் கோபமெல்லாம் மறந்து மலர்ந்த முகத்துடன் அவன் அருகில் வந்து 'ரகு உங்கள் உடல் எப்போதும் இரும்பாகவே இருக்கட்டும்... ஆனால் அதற்குள் இருக்கும் உங்கள் இதயம் மட்டும் இரத்தமும் தசையும் சேர்ந்த மனித இதயமாகவே இருந்துவிடட்டும்... அதை மட்டும் இரும்பாக்கி விடாதீர்கள் என்று அவள் கெஞ்ச அவன் 'சரி' எனத் தலையசைத்ததும் அவனால் என்றும் மறக்க முடியாத நிகழ்ச்சிகள்.

அவளுக்கு அவன் கொடுத்த வாக்குறுதி கயிறறுந்த பட்டம் போல எங்கோ எந்த மூலையிலோ போய்ச் சிக்கிக்கொண்டு விட்டது. இன்று அவன் தன் உடலுடன் சேர்த்து இதயத்தையும் இரும்பாக்கி விட்டான். அல்லது வாழவழி...? உமா என்னை மன்னித்துவிடு என்று அவன் உள்ளம் அழுதபடியே கூறியது. சிந்தனையின் கோரப் பிடியில் சிக்கித் தவித்த அவன் அதற்குமேலும் தனிமையில் அமர்ந்திருக்க முடியாதவனாய் காயவைத்த ரூபா நோட்டுக்களைத் திரும்பவுந் தன் மடிக்குள் சொருகிக்கொண்டு காலை நீட்டித் தலையை தூணுக்கு முண்டு கொடுத்தபடி கண்ணயரத் தொடங்கினான்.

மீண்டும் அவன் கண் விழித்தபோது கிழக்கு வானம் வெளுத்துக் கொண்டிருந்தது. கதிரவன் உதயமாவதற்குரிய அறிகுறிகள் தோன்றிக் கொண்டிருந்தன. பறவை இனங்கள் இன்னிசை எழுப்பியபடி ஆகாயத்தில் பறந்து செல்ல எங்கிருந்தோ வந்த கோயில் மணியோசை 'டாங் டாங்' என விடியப் போவதை அவனுக்குக் கட்டியங் கூறின. இரவு இருளில் மங்கிக் கிடந்த சுற்றுப்புறம் இப்போது தெளிவடைந்து கண்ணுக்குப் புலப்படத்தொடங்கியிருந்தன. தூரத்தே தண்ணீர் 'சலசல' என ஒழுகுஞ் சத்தங் கேட்டு அவன் படுத்திருந்த திண்ணையில் இருந்து இறங்கி அந்தப் புற்றரையில் நடந்து தண்ணீர்ச் சத்தங்கேட்ட திசையை நோக்கி நடந்தான்.

இப்போது அவன் ஆடை உடற் சூட்டில் உலர்ந்துவிட்டிருந்ததால் குளிர் சற்றுக் குறைவாக இருந்தது. நகரமண்டபத்தின் முன்புறமாக நடுமுற்றவெளியில் அமைக்கப்பட்டிருந்த நீர்க் குழாயில் ஒருவர் முகங்கழுவிக் கொண்டிருந்தார். ரகுவும் அந்தக் குழாயடிக்குச் சென்று முகங்கைகால் அலம்பிக் கொண்டு அங்கு நின்றபடியே காளிதேவியையும், பிள்ளையாரையும், கோணேசரையும் வணங்கி விட்டு மீண்டுந்தான் படுத்திருந்த இடத்திற்குச் சென்று 'தங்கச்சி தங்கச்சி' என்று பவானியை எழுப்பினான்.

அவன் குரல் கேட்காத நிலையில் அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் இருக்கும் நிலையில் அவளை எழுப்புவது பாவமாகப் பட்டது அவனுக்கு. ஆயினும் எழுப்பித்தான் ஆக வேண்டும் என்ற கட்டாயத்தின் பேரில் அவன் திரும்பவும் தங்கச்சி தங்கச்சி என்றழைத்தான். இம்முறை அவன் குரல் சற்றுப்பலமாக ஒலித்ததால் அவள் 'திடீர்' எனக் கண்விழித்தாள். அதன் பின்புதான் அவளுக்கு இரவு நடந்ததும் தான்முன் பின் தெரியாத ஓரிடத்தில் தூங்கிக் கொண்டிருப்பதும் நினைவுக்கு வந்திருக்க வேண்டும்.

அவள் அவசர அவசரமாக வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள். இருவரும் ஒருவரையொருவர் அன்பு கலந்த சகோதர பாசத்துடன் பார்த்துக் கொண்டனர். அநேகமாக நன்றாகப் பொழுது புலர்ந்து விட்டிருந்ததால் இருவரும் ஒருவரையொருவர் நன்றாகப் பார்த்துக் கொண்டனர். 'தங்கச்சி நேரமாகிவிட்டது வா, குழாயடியில் முகங்கழுவிக் கொண்டு பஸ்ஸுக்குப் புறப்படலாம்' என்று அவன் கூறிக்கொண்டேமுனசெல்ல அவள் அவனைப் பின் தொடர்ந்து சென்றாள்.

குழாயடி வெறுமையாக இருந்ததால் பவானிக்கு முகங்கழுவுவது சுலபமாக இருந்தது. அவள் முகங் கழுவிக்கொண்டு முன்தானையால் துடைத்துவிட்டு அவன் காட்டிய வழியில் அவனுடன் நடந்து சென்றாள். அஞ்சலகத்திற்கு முன்னிருந்த பஸ் நிறுத்தத்தில் இருவரும் சென்று நின்றனர். பஸ் வருவதற்கு இன்னுங் கால்மணி நேரம் இருந்தது. ரகு பக்கத்துக் கடையிற் சென்று ஒரு பாத்திரத்தில் தேநீர் வாங்கி வந்து அவளுக்குக் கொடுத்தான். பாத்திரத்தைத் திருப்பிக் கடையில் கொடுத்துவிட்டு அவன் திரும்பியபோது பஸ் அவ்விடத்திற்கு வந்தது. இருவரும் ஏறிக்கொண்டனர். அன்று பஸ் வண்டியில் தாராளமாக இடமிருந்ததால் ஒரு பகுதி ஆசனத்தில் இருவரும் வசதியாக அமர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

பஸ் புறப்பட்டது. கூடவே ரகுவின் சிந்தனையும் விரைந்து வேலைசெய்யத் தொடங்கியது. கொழும்பு அவனுக்குப் புதிய இடமில்லை. இதற்குமுன் அவன் ஓரிரு முறைகொழும்புக்குச் சென்றிருக்கிறான். ஏதாவது அலுவலாகச் செல்வதால் ஹோட்டலில் தங்கிக் காரியம் முடிந்ததும் திரும்பிவிடுவான். இம்முறை அவன் ஹோட்டலை நினைத்துக் கூடப் பார்க்கமுடியாது. தனியாளாகஇருந்தால்புகையிரதஸ்தான தங்குமறையில் காலத்தைக் கடத்திவிடலாம். ஆனால் இப்போது தான் அவனுககுப் பெருத்த பொறுப்பொன்றுள்ளதே. பருவப் பெண். அழகி அத்துடன் கர்ப்பமானவள். அவளையும் அழைத்துக்கொண்டு அவன் எங்கு செல்லமுடியும்...? நாலு பேர் கேட்டால் அவளை அவன் எப்படி அறிமுகப்படுத்துவது. கேட்பவர்கள் அவன் சொல்வதை நம்பவா போகிறார்கள்...? அவனால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவே முடியவில்லை.

எங்காவது ஒரு ஒதுக்குப்புறமாக ஏழைகளோடு ஏழையாகத் தங்கிக்கொண்டு எங்காவது வேலைதேடி நாலு காசு சம்பாதிக்கத் தொடங்கிய பின்புதான் ஒரு அறை எடுத்துக்கொண்டு பவானிக்கு நல்வாழ்வு அளிக்க முடியும் என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டான். அதற்கு அவள் சம்மதிப்பாளா என்பது அவன் அடுத்த பிரச்சினையாக இருக்கவே ''தங்கச்சி நாங்கள் போனதும் எங்காவது ஒட்டைக் குடிசையிற்தான் சில நாட்களைக் கழிக்கவேண்டி வரும் அதற்கப்புறம் அண்ணாவுக்கு ஒரு வேலை கிடைத்ததும் ஒரு நல்ல அறை பார்த்து தங்கச்சியை வசதியாக அண்ணா வாழவைப்பான். தங்கச்சிக்கு இது சம்மதமா...?'' என்று கேட்டுவிட்டு அவள் பதிலை ஆவலுடன எதிர்பார்த்தான்.

''என்னண்ணா இது... ஊர் பெயர் தெரியாத ஒரு அநாதைப் பெண்ணுக்கு அன்பு காட்டி அவளை வாழவைக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் இவ்வளவு கஷ்டப்பட்டு அழைத்துச்செலலும் நீங்கள் எங்கே இருக்கச் சொல்கிறீர்களோ அது தான் எனக்கும் சுவர்க்கம. இராமர் இருக்கும் இடந் தானேசீதைக்கு அயோத்தி'' ...என்று அவள் கூறியபோது அவளை அன்பொழுகப் பார்த்தான் அவன். அந்தப் பார்வையில் நன்றியுணர்ச்சி பெருக்கெடுத்தோடியது.

அதற்குமேல் அவன் அவளிடம் எதுவுமே கேட்கவில்லை. அவள்மேல் அவனுக்கு இருந்த அனுதாபம் இரட்டித்து அன்பாகப் பெருக்கெடுத்தோடியது. என்ன கஷ்டப்பட்டாவது அவளை ஒரு நல்லநிலைக்குக் கொண்டுவருவது இனித் தன் கடமை என்று சங்கற்பம் பண்ணிக்கொண்டான். மத்தியானம் இரண்டு மணியளவில் பஸ் கொழும்பில் வந்து நின்றதும் பிரயாணிகள் எல்லோரும் இறங்கத் தொடங்கினர். அவர்களோடு சேர்ந்து ரகுவும் பவானியும் இறங்கிக்கொண்டனர். பவானியிடம் ரகு தன் பெயரை ராமு என்றே அறிமுகப்படுத்தியிருந்தான்.

பக்கத்துக் கடை ஒன்றுக்குள் நுழைந்து இருவரும் மதிய உணவு சாப்பிட்டபின் ரகு தன்னிடம் இருந்த பணத்தை எண்ணிப் பார்த்தான். இன்னும் பன்னிரெண்டு ரூபா இருந்தது. அது இரண்டு நாட்களுக்கு வயிற்றுப்பாட்டைப் போக்கக் காணும் என்ற எண்ணத்தில் இருப்பிடந் தேடத் தொடங்கினான்.

நடைபாதையால் கால் போன பாட்டுக்கு நடந்து கொண்டிருந்தபோது எதிரே கீரைக்கடகத்துடன் திருநீறு பூசிய நெற்றியோடு ஒரு பெண் வந்துகொண்டிருந்தாள். ரகுவுக்கு அவள் முகம் பிடித்திருந்ததால் அவளை நிறுத்தி ஒரு வாரத்திற்குத் தாங்கள் தங்குவதற்கு வேண்டிய ஒழுங்கு செய்துதரவேண்டும் என உருக்கமாகக் கேட்டான். அந்தப் பெண் சேரிவாசியாக இருந்திருக்கவேண்டும். அதனால் ரகு தன்னிடம் இருக்க இடம் கேட்டபோது அவள் திகைப்படைந்தாள். ஆயினும் அவர்கள் நிலையைப் பார்த்தபோது அவர்களுக்கு எப்படியாவது இந்த உதவியைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவள் மனதில் உதித்ததால் ''தம்பி உங்களைப் பார்க்கப் பெரிய இடத்துப் பிள்ளைமாதிரியிருக்கு. என்னிடம் நீங்கள் இருக்க இடங் கேட்பது எனக்கு விசித்திரமாக இருக்கிறது. உங்கள் இருவர் நிலையையும் பார்க்க எனக்குப் பரிதாபமாகவும் இருக்கிறது. என்னால் செய்யக்கூடியது ஒரேயொரு உதவிதான். நான் இருப்பது ஒரு சேரி தம்பி. இரண்டு சிறிய அறைகளையுடைய மண் குடிசை. பிள்ளைகள் இருவரும் கல்யாணமாகிப் போய்விட்டார்கள். நானும் என் புருஷனுந்தான் இருக்கிறம். நீங்க விரும்பினால் ஒரு அறையை உங்களுக்கு ஒதுக்கித் தரலாம். அதைவிட மேலாக என்னால் எதுவும செய்யமுடியாது என்று அந்தப் பெண் கூறியதும் ரகுவுக்கு அப்பாடா என்ற நிம்மதிப் பெருமூச்சு வெளி வந்தது. ஒட்டுத் திண்ணையாவது கிடைத்தால் போதும் என்றிருந்தவனுக்கு ஓரறையே கிடைப்பதாக இருந்தால்...!

அந்தப் பெண் அவர்களுக்காக அன்று அந்தக் கீரை முழுவதையும் யாருக்கோ பேரம் பேசிக் கொடுத்துவிட்டு அவர்களை அழைத்துக் கொண்டு தன் இருப்பிடம் நடக்கத் தொடங்கினாள். மருதானைப் புகையிரதஸ்தானத்தின் அண்மையில் காணப்பட்ட சேரிகளில் ஒன்றிற்தான் அவள் குடியிருந்தாள். அது சேரியாக இருந்தபோதும் மிகவுந் துப்புரவாகக் கூட்டிப் பெருக்கப்பட்டு குப்பை கூழங்கள் இன்றி வேண்டாத நாற்றங்கள் அற்றுக் குடியிருக்கத் தக்க புனிதத் தன்மையுடன் காட்சியளித்ததைப் பார்த்தபோது ரகுவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அந்தப் பெண் தன் பெயர் புனிதம் என்று கூறியிருந்தாள். ஆகவே இடமும் அவள் பெயருக்கேற்கப் புனிதமாக இருப்பதாக ரகு நினைத்துக் கொண்டான்.

(11-ம் பக்கம் பார்க்க)

பா. பாலேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேட்டுப்பாருங்கள்?

திருவாளர் குயுக்தி

பொ. குளக்கோட்டன்
கித்துலூற்று,
திருமலை.

கே: திருமலைப் பகுதியில் வரவர தமிழ்பேசும் மக்களின் எண்ணிக்கை குறையவும், சிங்கள மக்களின் எண்ணிக்கை பெருகவும் காரணம் என்ன?

ப: அரசாங்க ஆதரவுடன் நடக்கும் அத்துமீறல் குடியேற்றம்!

கே: இங்கே குடியேற வரும் தமிழர்களை அரசாங்க அதிகாரிகள் மிக தொல்லைகளுக்கு உட்படுத்துகிருர்களே. அந்த தொல்லைகளில் நின்று நீங்கி குடியேறுவதற்கு வழியென்ன?

ப: தமிழரசுக்கட்சித் தலைமைப் பீடத்துடன் தொடர்புகொள்வதே!

ஃ

த. மனோகரன்
கொழும்பு 1.

கே: சிறு பான்மையோர் உரிமை கேட்டால் அது வகுப்பு வாதம். பெரும் பான்மையோர் சிறுபான்மையோரை நசுக்குவது தேசியம். இது சனநாயகத் தத்துவமா; கூறுமய்யா?

ப: அல்ல அதுதான்' சிங்கள நாயகம்'!

கே: எம். ஜி. ஆரை ஈழம் வரவழைத்த தினபதி கூட்டு முதலாளிகளின் சிங்கள, ஆங்கில ஏடுகள் இன்று எதற்காக எம். ஜி. ஆரைச் சிங்களவர் மத்தியில் பூச்சாண்டி காட்டுகின்றன?

ப: இரண்டும் வருமானத்துக்காகவே!

கே: தமிழருக்காகத் தமிழரால் நடத்தப்படும் தமிழ் பத்திரிகை யொன்றில்லாப் பெருங்குறையை நீக்கச் சுதந்திரனல் முடியாதா?

ப: முடியும், தமிழ்மக்கள் கைகொடுத்தால்!

ஃ

கனகராயன்
பாவற்குளம்.

கே: தென்னட்டுக் காந்தி அறிஞர் அண்ணு தமிழகத்துக்கு செய்த பணிக்கு ஒப்பாக ஈழத்துக் காந்தி செல்வா தமிழருக்கு செய்த பணியென்ன?

ப: தூங்கிக் கிடந்த தென்னட்டுத் தமிழர்களைத் தட்டியெழுப்பி இனவுணர்வூட்டி அவர்களைத் தமிழர்களாக்கினர் அண்ணு. அதேபோல ஈழத்திலும பிரதேசப்பிரிவினைபேசி பிளவு பட்டு, இனப்பெருமை மறந்து, தூங்கிக் கிடந்த தமிழர்களுக்கு தமிழ் உணர்வையும் எழுச்சியையும் ஊட்டி விடுதலை வீரர்களாக்கி, விடுதலைப் பாதையிலே அழைத்து வருகிருர் செல்வா.

ஃ

எஸ். காந்தன்
மக்குள் பொத்த.

கே: இக்காலத்தில் ''மினிஸ்கேட்'' (அ) நாகரீக மங்கைகள் கடைவீதிகளிலும் தெரு ஓரங்களிலும் பஸ்தரிப்புகளிலும திரிவதற்கு விட்டிருக்கும் பெற்றோர்களின் நோக்க மென்ன?

ப: சீதனமின்றிசுலபத்தில் மாப்பிள்ளையைப் பிடிப்பதற்காக இருக்கலாம்!

கே: திரு. வி. நவரத்தினம், தமது காரில் சிங்கள சிறீக்கு பக்கத்தில் தமிழ் சிறீ போட்டுள்ளது எதைக் காட்டுகிறது?

ப; அவரது கொள்கைக் குழப்பத்தைக் காட்டுகிறது. மகாஇராணியின் ஆதிபத்தியத்தின் கீழ் தனித் தமிழ் நாடு கொருபவர், அவரது தனித்தமிழ் நாட்டிலும் சிங்களத்துக்கு தமிழுடன் சம அந்தஸ்து வழங்கப் போகிருரா?

கே: சிங்களச் சிறிக்குப் பக்கத்தில் தமிழ் சிறி எழுதுவது சட்டத்தை மீறுவதாகுமா?

ப: இல்லை. இது சட்டத்தை மீறுவதல்ல. சிங்கள சிறியை எடுத்து விட்டு அந்த இடத்தில் தமிழ்சிறி எழுதுவதுதான் சட்டத்தை மீறுவதாகும்!

கே: இலங்கை அரசாங்கம் நாவலரின்உருவம்பொறித்த முத்திரை வெளியிடுவதில்லை என்று முடிவு செய்ததன் காரணமென்ன?

ப: நாவலர் ஓர் சிங்களவராகப் பிறக்கத்தவறியதுதான்!

ஃ

'ஆறுமுகதிலகர்'
காரைநகர்

கே: ஊர்காவற்றுறை பா. உ. மந்திரி பிரேமதாசாவை வரவேற்ற செயலை எதற்கு ஒப்பிடலாம்?

ப: பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் விலாங்குத்தனத்திற்கு!

கே: தமிழரசுக்கட்சி மீண்டும் போர்க்களத்தில் குதிக்க தயாராகி விட்டது என்ற செய்தியை அமைச்சர் பிரேமதாசாவிடம் பகிரங்கமாக செல்வா கூறியதிலிருந்து, நாம் தந்தை செல்வாவிடம் விசேடமாகக் காணக் கூடிய ஓர் சிறந்த பண்பு யாது?

ப: உள்ளத்திலிருப்பதை அப்படியே வெளியே தெரிவிக்கும் நேர்மைக்குணம்.

கே அறிஞர் அண்ணுவின் மறைவு பற்றி தங்கள்கருத்து என்ன?

ப: தமிழ்த் தாய் தனது எழுதுகோலை இழந்து விட்டாள்.

ஃ

க. சண்முகலிங்கம்,
தாளங்குடா.

கே: தமிழரிடத்தில் பல வகையான சாதிப் பிரிவுகள் தொன்றுதொட்டு இருந்து வருகிறதல்லவா? அப்பிரிவுகளில் அறிஞர் அண்ணுவின் தாய், தந்தையர்கள் எந்த மரபைச் சார்ந்தவர்கள்?

ப; சாதியை ஒழிக்கத் தோன்றிய மாபெரும சமூக சீர்திருத்த சிற்பியான அறிஞரின் தாய்தந்தையர்களும் தமிழ் மரபுதான் நண்பரே!

ஃ

'விவேகானந்'
தம்பிலுவில்லை.

கே: அரசாங்க வேலைசெய்யும் தமிழர்கள் சிங்களம் பயிலவேண்டுமென கட்டாயப்படுத்துகிருர்களே; சிங்களவர்களை, தமிழ் பயில வேண்டுமெனக் கட்டாயப் படுத்தவில்லையே ஏன்?

ப: அரசாங்கம் சிங்களவர்களின் கையிலிருப்பதால்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194. ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12

# கருணாநிதியின் "புதிய புறம்"

**அண்ணுவுக்கு பின் தமிழ் நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று அண்ணனின் வழியில் புதிய புறம சமைக்கவிருக்கும் கலைஞர் மு கருணாநிதி, தமிழ் இலக்கியத்தில்மூழ்கி முத்தெடுத்து, அதை சத்தான தமிழில் படைக்கும் ஆற்றலில் தனக்கு ஒப்பாரும் மிக்காருமற்றவர்.**

வீரமேந்திய நெஞ்சம் படைத்த சங்ககால மறவர்களின் போர்க்குணத்தை—கொடைத் திறத்தை...

பாவேந்திய நாவேந்தர்கள் பாடிவைத்த ஒருபெரும் காப்பியம் புறநானூறு.

கங்கையாற்றுக் கடும்புனலோரத்தில் வடவாரியரைக் கலக்கிய அந்தக் காலத்து திண்மை நிறைந்த வீரத்தைப் போலவே புறநானூற்றின் நடையும் கடுமை நிறைந்ததாயிருக்கும்.

அனைவரும் சுவைக்கும் வண்ணம் புறப்பாடலில் எளிமை சேர்த்து—இனிமை கலந்து கலைஞர் தரும் பாடல் இது:

பனி முட்டை அடை காக்கும்
பசும்புல்லின் தரை மீது
மணித் தேர் அசைவது போல்
மாதொருத்தி நடந்து வந்தாள்
கனித் தமிழ்ச் சொல் உதிர்க்கும் புலமை
மிக்காள்
காக்கை பாடினி பொன்முடியார்க்குத்
தமிழில் அவள் அக்காள்
அதியமான் நெடுமானஞ்சி—வேள் பாரி
வள்ளல் நாடன்
சேரமான் மாவெண் கோவன்,
கானப் பேர் தந்த வழுதி—மற்றும்
சோழனும் பெருநற்கிள்ளி
ஆகியோர் புகழைப்பாடித் தமிழுக்கு
அணி பல பூட்டி நின்ற
அறிவொளி ஔவை நல்லாள்!
காலைக் கதிரவன் போல் கைசிவக்கக்
கொடை வழங்கும்
காவலர்கள் வாழ்ந்திருந்த தமிழ் நாடு!
ஓலை கொண்டொருவன் போர் என்று
வந்து விட்டால்
மாலை சூடுகின்ற வேளையென்றும்
பாராமல்
தோளைத் தொத்துகின்ற பெண்கிளியைப்
—புறம் விடுத்து,
வாளைக் கூரேற்றி வான் நோக்கி
நிமிர்கின்ற வீரமறவர்களின் தாய்வீடு
பாலை குறிஞ்சிமுல்லை நெய்தல்
மருதமென்று
நிலம் வகுத்து வாழ்கின்ற தமிழரிடை
சோலைப் பூவினம் போல் தமிழ்க் கவிதை
மலரவைத்தாள்.
தாயகத்துக் கற்புநிறை பிறழாத
காதல் சொன்னள்— களம் சென்றூர்
வீரம் சொன்னள்.
களத்தில்,
சாதல் இன்னே வரட்டுமென்று
சென்றுவிட்ட தலைமகனும்,
சந்தனத்துக் கட்டைபோல மணக்கட்டும
இலக்கியத்தில்
எனக் கூறிப்
பாதம் முதல் உச்சி வரை குளிர்கின்ற
தாய்க்குலத்தை
எண்ணி யெண்ணிப் பெருமை
கொண்டாள்,—தன்
பூவடிகள் புல்மீது அழுந்தியதால்
பனித்துளிகள் அழிந்துவிடும்.
போரடியில் நெல்மணிபோல் பகைவர்
களின் சிரம் வீழும் அமர்க்களத்தில்!
இதை நினைத்து,
நடக்கின்றுள் ஔவை யம்மை!
நாமணக்கும் தமிழம்மை! அறிவம்மை!
அழகம்மை!
காலூன்றிப் பனியொத்தி வருகின்ற
தாயின் முன்
கோலூன்றிப் பிறிதொரு தாய்
வந்து நின்றுள்;
''அடி! தும்பை மலர் முடிதாங்கி!
துவண்டு விட்ட காலிரண்டும்
வாழைத்தண்டாய்க்
குளிர்ந்துவரும் நேரத்தில்
நீ ஏன் வந்தாய்;
விற்புருவம் என்றுன் ஆளன்
அழைத்திட்ட காலம் போய்
வில்லுருவம் முதுகில் பெற்ற
இள நங்காய்!
விழியிரண்டும் வேலென்றூர் அன்று;
வழி இருண்டு போனதென்று
கோல்கொண்டாய் இன்று!
தமிழ்நாட்டு முத்தெல்லாம்
தீர்ந்ததென்று பல் கழற்றிப்
பிறநாட்டு வாணிபத்தைச்
செய்தவளே!
எங்கெழுந்தாய்? ஏன் பதைப்பு?
என்ன வாட்டம்?'' எனக் கேட்டுக்
[illegible] ஔவையம்மை!
வேலி போட முடியாது
இளமைக்கென்று தெரிந்த பின்னும்
கேலி பேசும் உன் போக்குப்
புரிய வில்லை.''
எனமறித்து அந்தத் தாய் பேசலானுள்;
''புண்பட்ட என்னகத்தில் புலமைத்
தாயே, உந்தன் கேலி,
பண்பட்ட தமிழ் மருந்தாய்ப்
பாய்வதை நான் உணருகின்றேன்
கண்கெட்ட பின்னும் எந்தன்
கரம் தொட்டு வணங்கிச் சென்ற
காளையை நான் மறக்கவில்லை.
மண் முட்டி எழுந்து நிற்கும்
மாங்கன்றின் தளிர்தான் மேனி
பொன்கொட்டிக் கொடுத்தாலும்
வளையாத மனவலிமை
புலிக்குட்டி விளையாடும் அவன் மடியில்!
புதர் விலங்கு நடுநடுங்கும் அவன்
பிடியில்!
அந்த மகன் ஆசைமகன்
அணிவகுத்தான்.
சொந்த மண்ணின் நலங்காக்கப்
பணிவகுத்தான்.''
முடிக்கவில்லை முதியவளும்:
பொறுக்கவில்லை ஔவைக்குக்;
குறுக்கிட்டாள்.
''களம் சென்ற மகன் வீரம் புகழ்ந்து
கூறிக்
கண் கலங்காத் தாய் வீரம் காட்டுதலே
தமிழ் மரபு!
முதியவளே! மறவர் குல வழக்கிற்குப்
புதியவளாய் இருக்கின்றுய்—
வியக்கின்றேன்''
என்றுள்,
''முழுதும் கேள் பெருமாட்டி!
பழுதொன்றும் காணமாட்டாய்
என்நிலையில்!
அழுதழுது என் விழிகள்
வீங்கியதை மறுக்கவில்லை.
பொழுதெல்லாம் கவலையினுல்
புலம்புவது பொய்யல்ல;
ஏனென்று தெரிந்து கொள்வாய்
நானென்றும் மறைக்க வில்லை!''
''சொல்!'' என்றுள் ஔவை
சொன்னள் அவள்;
''கொற்றக் குடை சாயாத கொடித்தேர்
மன்னர்
கற்றறிந்த பாவாணர் கடமைமிகு
மாவீரர்
மற்றவர்க்கும் பெருந்தலைவர்
அறிவாய் நன்று!
அவர் படையில் இருக்கின்றூர்
பல்லோர்வீரர்
ஆட்டுக்கடா அணிவகுத்துச்
செல்வதுபோல்
அரசர் பின் நடப்பதற்குத்
தயங்குமாட்டார்.
ஆயிரம் பேர் மன்னர்க்குப்
பின்னல் இருந்தும்
அவர் மட்டும் என் மகன்பால்
அளவற்ற அன்பு கொண்டார்.
போர் முனையில் ஓய்வெடுத்துக்
கிடக்கும்போது
'தேறல்' எனும் உற்சாகச் சாறுதனைத்
திறல்மறவர் அருந்துதற்குத்
திரண்டு நிற்பார்.
அப்போது மன்னரவர் என்மகனை
அருகழைத்து
அனைவரினும் அதிகபானம் அளித்து
மகிழ்வார்.
என் வாட்டம் இப்போது கேட்பாயம்மா
என்புகளைத் தெப்பமாக்கி நரி மிதக்கும்
போர்க்களத்தில்
தலையுருட்டிப் பந்தாடும் பறவையினம்!
அத்தலையில் ஒரு தலையாய்
என்மகன் தலையும்
இருந்தாலன்றே இறைவனளித்த
தேறலுக்குப்
பெருமையுண்டு

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# திரைப்பட கட்டுப்பாடா? தமிழ் இன ஒழிப்பு நடவடிக்கையா?

மொழியுரிமை, குடியுரிமை, பிரதேச உரிமை, உத்தியோக உரிமை யாவும் பறிக்கப்பட்டு ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் இந்நாட்டில் மீளா அடிமைகளாக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் மக்களின் வெந்த உள்ளங்களில் வேலைச் சொருகுவது போன்ற ஓர் நடவடிக்கையில் டட்லி அரசாங்கம் இறங்கியுள்ளது. ஆம், இலங்கையில் தமிழ்ப் படங்கள் திரையிடுவதற்குப் புதிதாக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டையே இங்கு குறிப்பிடுகிறோம்.

எதிர் காலத்தில் புதிய தமிழ்ப் படங்கள் திரையிடப்படும்போது, அகில இலங்கையிலும் மூன்று பிரதிகளுக்கு மேல் திரையிடப்படக் கூடாது என அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம். சிங்களத் திரைப்படத் தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுவதாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

சிங்களத் திரைப்படத் தொழிலை ஊக்கப்படுத்த அரசாங்கம் தாராளமாக உதவி புரியட்டும். நாம் அதற்கு மறுப்போ எதிர்ப்போ தெரிவிக்கவில்லை. ஆனால் சிங்களத் திரைப்படத் தொழிலை ஊக்குவிப்பதாகக் கூறிக் கொண்டு தமிழ்ப் படங்களைக் கட்டுப்படுத்தும் ஆட்சியாளரின் திரை மறைவு நோக்கத்தைச் சிறிது ஆழ்ந்து சிந்தித்தால், மிகவும் பயங்கரமான இன ஒழிப்பு நடவடிக்கையாகவே அது நமது கண்களுக்குத் தோன்றுகிறது.

இலங்கையில் சிங்களத் திரைப்படத்துறை முன்னேறி இருக்கும் அளவுக்கு உள்ளூர் தமிழ்த் திரைப்படத் துறையும் முன்னேறியிருந்தால்—இலங்கையில் கணிசமான அளவு தமிழ்ப் படங்கள் தயாரிக்கப்பட்டால் — தென்னிந்திய தமிழ்ப் படங்களுக்குக் கட்டுப்பாடு விதிப்பதைக் கூட ஓரளவு பொறுத்துக் கொள்ளலாம்.

ஆனால் இந்நாட்டில் தமிழ்த் திரைப்படத் துறை வளர்ச்சியடையாத நிலையில் — தென்னிந்திய தமிழ்ப் படங்களுக்கும் மூன்று பிரதிகளுக்கு மேல் திரையிடப்படக் கூடாதுஎனக் கட்டுப்பாடு விதித்தால் — அதன் மறைமுக அர்த்தம் என்ன? தமிழ் பேசும் மக்களே, இஷ்டமிருந்தால் சிங்களப் படத்தைப் போய்ப் பாருங்கள் — இன்றேல் உங்களுக்குப் பொழுது போக்கே கிடையாது என்பதுதானே அர்த்தம்.

சரியாகவோ தவருகவோ இந்நாட்டுச் சாதாரண பொது மக்களின் முக்கிய பொழுது போக்கு அம்சமாக திரைப்படம் இன்று விளங்குகிறது. ஒரு புதிய தமிழ்ப் படத்தின் மூன்று பிரதிகளைத்தான் ஒரு சமயத்தில் வெளியிடலாமென்ருல் திரைப்பட இறக்குமதி நிறுவனங்கள் தான் என்ன செய்ய முடியும்? தமிழ்ப் பிரதேசமான வடக்கு கிழக்கு, மாகாணங்களில் திரையிடுவதற்குக் கூட ஆக மூன்றே மூன்று பிரதிகள் போதியன அல்லவே. இந்நிலையில் கொழும்பிலும், மலைநாட்டிலும், ஏனைய பகுதிகளிலும் வாழும் இலட்சக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் நிலை என்ன? அவர்கள் தங்கள் பொழுதைப் போக்க எந்தப் படத்தைப் பார்க்க முடியும்?

இங்குதான் அரசாங்கத்தின் நச்செண்ணம் அம்பலமாகிறது. தமிழ்ப் படம் திரையிடப்படாத இடங்களிலுள்ள தமிழ் பேசும் மக்கள் வேறு வழியின்றிப் பொழுது போக்குவதற்காகச் சிங்களப் படங்களுக்குச் செல்லத் தொடங்குவர். அதன் பின் படத்தை விளங்கிக் கொள்வதற்காகத் தாமே வலிந்து சிங்களம் படிக்க ஆரம்பிப்பர். சிங்களப் படத்தைப் பார்த்துப் பார்த்துச் சிங்கள கலாசாரத்தையும் பின் பற்றத் தொடங்குவர், படம் பார்த்து விட்டு வீடு சென்ற பின்னர் படத்தைப் பற்றிய விமரிசனங்களும் கூட சிங்களத்தில் தான் நடைபெறும். இப்படிப் படிப்படியாகத் தமிழ் பேசும் மக்களின் அன்றாட வாழ்வில் சிங்களம் இடம் பெறச் செய்து விடலாம் — தமிழர்களைச் சிங்களவர்களாக்கி விடலாம்.

—இத்தகைய துரோக சிந்தையுடன் தான் — தமிழ் பேசும் மக்களிடம் சிங்களத்தை மறைமுகமாகத் திணித்து சிங்களவர்களாக அவர்களை மாற்றும் இன ஒழிப்பு நடவடிக்கையின் ஓரம்சமாகத் தான் — அரசாங்கம் தமிழ்ப் படங்கள் திரையிடுவதற்குக் கட்டுப்பாடு விதித்துள்ளது என்பதே நமது தீர்க்கமான கருத்தாகும்.

எதிர்காலத்தில் ஈழத்தில் உள்ளூர் தமிழ்த் திரைப் படத்துறை வளர்ச்சியடைந்து சிங்களத் திரைப்படத் துறையை வெற்றிகொண்டால், உள்ளூர் தமிழ்த்திரைப் படத்துறையை நசுக்குவதற்கும் இதுபோன்ற ஓர் கட்டுப்பாட்டை அரசாங்கம் விதிக்காது என்பது என்ன நிச்சயம்?

தமிழ்த் திரைப்படக் கட்டுப் பாட்டுக்குப் பின்னல் தமிழ் பேசும் மக்களிடம் அவர்களை அறியாமலே சிங்களத் திரைப்படங்களைத் திணித்து — அதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் தங்கள் மொழியையும் கலாசாரத்தையும் பண்பாட்டையும் காலப் போக்கில் தம்மையறியாமலே கைவிடும்படியான சூழ்நிலையை உருவாக்கித் தமிழினத்தைச் சிங்கள மயமாக்கும், பயங்கரச் சதித் திட்டம் காணப்படுகிறது.

ஆகவே, இச்சதியை முறியடிப்பதற்காக இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் ஸ்தாபனங்களும், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்த் திரைப்படக் கட்டுப்பாட்டை எதிர்த்து வேண்டிய நடவடிக்கையை உடன் எடுப்பார்களாக.

# "இலங்கையிலும் தென் ஆபிரிக்க இனவெறியா?"

## தமிழ் மொழி சுற்றறிக்கை: பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிறதா அரசாங்கம்?

சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்பதுதான் தேசிய அரசாங்கமென்று கூறப்படும் டட்லி அரசாங்கம் பின்பற்றி வரும் கொள்கையென்பதை கடந்த நான்கு ஆண்டுகல ஆட்சியில் நாட்டு மக்கள் தெட்டத்தெளிவாக அறிந்து கொண்டு விட்டார்கள். அதிலும் குறிப்பாகத் தமிழ் பேசும் மக்கள் அனுபவ பூர்வமாக தெரிந்து வைத்திருக்கிருர்கள்.

சிறுபான்மை மக்களுக்கு பாரபட்சம் காட்டமாட்டோம் என்று கூட்டங்களில் நின்று அமைச்சர்கள் பல்லவி பாடுவார்கள் — யாவருக்கும் சம சந்தர்ப்பம் சம வாய்ப்பு என்று முகாரி பாடிமுடிப்பார்கள். ஆனல் நடைமுறையில் ஒவ்வொரு துறையிலும் சிறுபான்மையினருக்கு பாரபட்சம் காட்டப்பட்டுக்கொண்டே வருகிறது. அதை தடுத்து நிறுத்துவதற்கு எவ்வித உருப்படியான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

### பிள்ளையையும் கிள்ளி...

பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டும் கலையில் டட்லி அரசாங்க அமைச்சர்கள் கைதேர்ந்தவர்களாக இருக்கிருர்கள்.

சிங்கள மொழியைத் திணிக்கமாட்டோமென்று கூறிக்கொண்டே லக்சல, சல்பில' ஜாதிகபொல, ஜாதிகசம்பத, சியவச போன்ற தனிச்சிங்கள சொற்களை மறைமுகமாக தமிழ் மக்களின் தொண்டைக்குள் திணிக்கும் முயற்சிக்கு தமிழ பேசும் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தும், இன்னும் தமது போக்கை ஆட்சியாளர்கள் மாற்றவில்லை.

### சொல்லும் செயலும்

சிறுபான்மை மக்களுக்கு கொடுத்தவாக்குறுதியை நிறைவேற்ற முடியாவிட்டால் பதவியை உதறி விடுவேன் என்று சத்திய வந்தர் போல முழங்கி வந்த பிரதமர், மாவட்டசபை மசோதாவை கொண்டுவருவதாக அளித்த மிகப் பெரிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத நிலைமை ஏற்பட்ட பின்னும், பதவியில் ஒட்டிக் கொண்டுதானிருக்கிருர்.

பிரதமர் தமது பதவியிலிருந்து வெளியேற வேண்டும் என்று இங்கு நாம் குறிப்பிட [illegible] சொல்லுக்கும் செயலுக்கும் எவ்வளவு வேறுபாடு காணப்படுகிறது என்பதற்கே இதை எடுத்துக்காட்டினேம்.

தமிழ் பேசும் மக்கள் தமிழில் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு தமிழில் பதில் பெறலாம் என்று விளக்கம் தருவார் பிரதமர். ஆனல் அவரது அலுவலகத்திலிருந்து யாழ்ப்பாணத்திலிருக்கும் தமிழ் மகன் ஒருவனுக்கு தனிச்சிங்களக் கடிதம் அனுப்பப்பட்டு வருகிறது.

### அமிர் எழுப்பிய கேள்வி

அண்மையில் பாராளுமன்றத்தில் வட்டுக்கோட்டை

சுதந்திரன் அரசியல் நிருபர்

பா. உ. திரு. அ. அமிர்தலிங்கம், விமானப்படைப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப் பட்ட இரு தமிழ் பேசும் இளைஞர்கள், சிங்களத் தேர்ச்சியில்லையென்ற காரணத்தால் அநீதியாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருப்பதை பிரதமரின் கவனத்துக்கு கொண்டு வந்த பின்னர் தான், அது பற்றி விசாரிப்பதாக பிரதமர் கூறியிருந்தார்.

இவ்விஷயங்களில் அரசாங்கத்துக்கு தெளிவான திட்டமான கொள்கை இருந்தால் எதற்காக அந்த இரு இளைஞர்கள் சிங்களதேர்ச்சியின்மைக்காக வேலை நீக்கம் செய்யப்பட வேண்டும்? சிங்களம் தேவையற்ற ஓர் பதவிக்கு தெரிவு செய்யப் பட்டவர், சிங்கள மொழியறிவு இல்லை என்ற காரணத்தால் அப்பதவியிலிருந்து விரட்டப்படுவது அப்பட்டமான குறுகிய பாரபட்சமன்றி வேறென்ன?

### செய்த குற்றம் என்ன?

தமிழ் பேசும் இனத்தில் பிறந்தது தவிர வேறு அந்த இளைஞர்கள் செய்த குற்றம் என்ன? தமிழ் பேசும் இனத்தைச்சேர்ந்த இலட்சக்கணக்கான வாலிபர்களின் எதிர்காலத்தை - இவ்விரு இளைஞர்களுக்கு நேர்ந்த கதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பயங்கரமானதாக தோன்றுகிறது.

இன அடிப்படையில் உத்தியோகம் வழங்குவதும் தொழில் துறையில் பாரபட்சம் காட்டுவதும் தென் ஆபிரிக்காவிற்கே இதுவரை காலமும் சொந்தமாக இருந்தது. இப்பொழுது இலங்கையும் தென்னுபிரிக்கா வழியைப் பின் பற்ற ஆரம்பித்து விட்டதா என்றுபிரதமரைக் கேட்கிறோம்.

### நெஞ்சுரம் வருமா?

இலங்கை மற்றொரு தென்னுபிரிக்காவாக மாறுவதை பிரதமர் விரும்பவில்லையென்ருல்- தமிழ் இனத்துக் கெதிராக அரசாங்க உத்தியோகங்களில்—-தொழில் துறைகளில் பாரபட்சம் காட்டும் சிங்கள வெறிபிடித்த அதிகாரிகளை—அவர்கள் எவ்வளவு உயர் பதவியில் இருந்தாலும் —கடுமையாகத் தண்டித்தேயாக வேண்டும். அந்த அளவு நெஞ்சுரம் பிரதமருக்கு வருமா என்பது தான் கேள்வி.

இதுநிற்க, 1966ம் ஆண்டு நிறைவேற்றப் பட்ட தமிழ் மொழிப் பிரமாணங்களை நடைமுறைப் படுத்துவதற்கான சுற்றறிக்கையை வெளியிடும்படி மூன்று ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் பேசும் மக்களும் தமிழரசுக் கட்சியும் ஆட்சியாளரிடம் கரடியாகக் கத்த வேண்டியிருந்தது. தமிழ் மொழிப் பிரமாணங்களை அமுல் நடத்துவதில் ஆட்சியாளர்களுக்கு அக்கறையிருந்தால், சுற்றறிக்கையை எப்பொழுதோ வெளியிட்டு இருக்க முடியும். ஆனல் தமிழ், தமிழர் தமிழினம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அரசாங்கம் வேண்டா வெறுப்புடன் செயற்பட்டு வருவதற்கு உதாரணம் இது ஒன்றே போதும்.

இறுதியில் கடந்த மாதம் (பெப்ரவரி) 28ந் திகதி இறைசேரிச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. தமிழ் பேசும் மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு சுற்றறிக்கை அமையாவிட்டாலும், சில மொழி உரிமைகளுக்கு அங்கீகாரம் அளித்திருக்கிறது சுற்றறிக்கை.

### சிங்கள வெறியர் முயற்சி

இச்சுற்றறிக்கையை கூட அமுல் நடத்தாமல் வாபஸ் வாங்கும்படி சிங்கள வெறிபிடித்த புத்த சாமியார்களும் பௌத்த ஸ்தாபனங்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளன. இதுவும் கூட 'தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும்கிள்ளிவிடும்' ஆட்சியாளர்களின் செயலாக இருக்குமோ என்று தமிழ் பேசும் மக்கள் இன்று ஐயப்படவேண்டிய நிலையிலுள்ளனர்.

ஏனெனில், சுற்றறிக்கை வெளியிடப்பட்டு மூன்று

(9ம் பக்கம் பார்க்க.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தில்:

# நா காக்கத்தெரியாத பீலிக்ஸ் வட்டுக்கோட்டையாரிடம் சுடச்சுட வாங்கிக் கட்டினார்!



**கல்வி மந்திரி இரியகொல்லையும், திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயகாவும் திரு. அமிர்தலிங்கத்திடம் வகையாகச் சிக்கிக்கொண்டு "வாங்கிக்கட்டி"னார்கள். சும்மா இருக்கமாட்டாமல் வாயைக்கொடுத்த திரு.பீலிக்ஸ் அமிர்தலிங்கத்தாரின் சொல்லம்புகளுக்கு ஈடுகொடுக்க முடியாதவாறு தலைகவிழ்ந்தார்.**

**கிளிநொச்சி பா. உ. திரு.இரத்தினம் ஒரு கட்டத்தில் வவுனியா எம்.பி.யை நோக்கி "நான் பேசியதமிழ் விளங்கவில்லையா" என்று கேட்டுச்சரியான சூடு கொடுக்கத் தவறவில்லை. பண்டிதரின் செழுமையான தமிழை உண்மையில் வவுனியா எம்.பி.யால் விளங்கிக் கொள்ள முடியாமலுமிருக்கலாமல்லவா?**

**இம் மாதம் 6ந் திகதி பாராளுமன்றக் கூட்டம் இவ்விதம் சூடுள்ளதாகவும் சுவையுள்ளதாகவும், பயனுள்ளதாகவும் அமைந்திருந்தது.**

சனப் பிரதிநிதிகள் சபைக் கூட்டத்துக்கு உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமைவகித்தார். அன்றைய தினம் தனியார் தீர்மானங்கள் பல விவாதித்து நிறைவேற்றப்பட்டன. அரசாங்கக் கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சியினருக்குமிடையே ஓர் நட்பு மனப்பான்மையும் காணப்பட்டது.

குறைந்த வருமானமுடைய கிராமசபைகளுக்கு கூடுதல் உதவிப்பணம் வழங்கப்படவேண்டுமென்ற ஓர் தீர்மானத்தை சுதந்திரக் கட்சி எம். பி.யான எஸ். பி. ஹேரத் கொண்டுவந்தார்.

### பீலிக்ஸ் வாய் திறந்தார்

இதைத் தொடர்ந்து தீர்மானத்தின் மீது திரு. பீலிக்ஸ் டயஸ் பேசத் தொடங்கினார். பேசத் தொடங்கினார் என்று கூறுவதைவிட ஏசத்தொடங்கினார் என்று கூறுவது சாலப் பொருத்தமானது. யாரை என்கிறீர்கள்? முன்னாள் அமைச்சர் திருச்செல்வத்தைத்தான்.

திரு. திருச்செல்வம் அமைச்சராகஇருந்தபோது, நாடு முழுதுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு கடன் வழங்கவென அரசாங்கம் ஒதுக்கிய தொகை முழுவதையும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கே கொடுத்துவிட்டதாகவும் 1966ம் ஆண்டு 8 லட்சம் ரூபாவும் வடக்கு மாகாணத்திற்கே ஒதுக்கப்பட்டதாகவும், தமிழரசுக்கட்சியாளரான முன்னாள் அமைச்சர் மீது வசைபுராணம் பாடி முடித்தார் திரு. பீலிக்ஸ். பிரேமதாசாவே இதைக் கண்டித்திருப்பதாகக் கூறி இன்றைய உள்ளூராட்சி அமைச்சரையும் தனது பேச்சுக்கு சாட்சியாக இழுத்தார்.

'இருவை' திட்டித் தீர்த்துவிட்ட திம்மதியுடன் அங்கிருந்த தமிழரசு பா. உக்களை ஒருபெருமைப்பார்வை பார்த்துவிட்டு அமர்ந்தார். ஆனால் அவரது நிம்மதி நீடிக்கவில்லை.

### 'அமிர்' வந்தார்

அப்பொழுது தான் வெளியிலிருந்து சபைக்குள் வந்த வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் இருக்கையில் அமர முயற்சிக்கிருர். திரு. தர்மலிங்கம் எம். பி. அவரது காதுக்குள் ஏதோ குசுகுசுத்தார். உட்கார முயன்ற திரு. அமிர்தலிங்கம் எழுந்தார். 'மிஸ்டர் டெப்பியூட்டி ஸ்பீக்கர்!' திரு. அமிர்தலிங்கத்தின் வெண்கல நாதக்குரல் சபையில் எதிரொலித்தது. அரசாங்க எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே ஒரே பரபரப்பு. தமிழரசு எம். பீக்கள் முகத்தில் மகிழ்ச்சி ரேகை. பீலிக்ஸ் முகத்தில் கலவர உணர்ச்சி!

'மிஸ்டர் டெப்பியூட்டி ஸ்பீக்கர் என்று ஆரம்பித்த வட்டுக்கோட்டைச் சிங்கம் "நான் இங்கு பேசுவதற்கென வரவில்லை. ஆனால் தொம்பேயாரின் பேச்சைக் கேட்ட பின்னர்தான் சில குறிப்புக்கள் கூற முன்வந்தேன்" என்று ஆரம்பித்தார்.

மிகச் சரளமான ஆங்கில நடையில் திரு. பீலிக்ஸை எவ்வளவு தூரம் குத்தல் நிறைந்த மொழிகளால் நையாண்டி செய்யமுடியுமோ அவ்வளவு தூரம் நையாண்டி செய்தார் திரு. அமிர்தலிங்கம்.

### விசித்திர மூளை

"ஒரு சமயம், நான் இங்கு (சபைக்கு) புல் வளர்க்கக் கூட திரும்பிவரமாட்டேன் என்று கூறிவிட்டு வெளியே சென்ற பீலிக்ஸ் இங்கு மீண்டும் வந்து புல் வளர்க்க ஆரம்பித்துவிட்டார். அவர் எதை வளர்க்கிறாரோ எனக்

## வவுனியா எம். பிக்கு இராசதுரை சூடு

குத் தெரியாது—ஆனால் அவரது மூளை ஒரு புதுமையான வழியில் வளர்ச்சியடைகிறது"—இவ்வாறு கூறினார் திரு. அமிர்தலிங்கம்.

திரு. அமிர்தலிங்கம், தம்முடைய பேச்சில், திரு. திருச்செல்வத்தைப் பற்றி பீலிக்ஸ் குறிப்பிட்டது அனைத்தும் முழுப் பொய் என்பது பட்ஜெட் விவாதத்தின்போது என். எம். இதே பிரச்சினையை எழுப்பிய நேரத்தில் புள்ளி விபரங்களுடன் நிரூபிக்கப்பட்டுவிட்டதென்றார். வேண்டுமானால் 'ஹான்சார்ட்டை' பார்த்து பீலிக்ஸ் தெரிந்துகொள்ளட்டும் என்று சாடினார் அமிர்.

வடக்கே வந்து, பின்தங்கிய—தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கும் கூட்டுக் கட்சிகள் இங்கே பாராளுமன்றத்தில்—திரு. திருச்செல்வம் அக்கேவேலியில் சிறுபான்மை மக்களுக்காக வீடமைப்புத் திட்டம் அமைத்து கொடுத்ததை பாராட்டத் ... கள். சிறுபான்மைத் தமிழர்களுக்காக முதலைக் கண்ணீர் வடிப்பதை நிறுத்தட்டும்'' இவ்வாறு இறுதியாக கூறிமுடித்தார் திரு. அமிர்.

திரு. அமிர்தலிங்கம் பேசி முடித்ததும் — தமிழரசார் முகத்தில் மகிழ்ச்சிக்களையும் பீலிக்ஸ் முகத்தில் பிரேதக்களையும் காணப்பட்டது.

### இரத்தினம் பிரேரணை

இதற்குமுன் திரு. இரத்தினம் வெளியீட்டுத் திணைக்களத்தினால்

## 'அமிரின்' சொல்லம்புக்கு கல்வி மந்திரியும் தப்பவில்லை!

வெளியிடப்படும் சகல தமிழ், சிங்களப் புத்தகங்களுக்கும் சம விலை இருக்க வேண்டுமென்ற தீர்மானத்தை கொண்டுவந்தார். இத்தீர்மானத்திற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆதரவு கொடுத்தனர். திரு. இரத்தினத்தின் பிரேரணையை திரு. வி. தர்மலிங்கம் அனுவதித்தார். இப்பிரேரணையை முன்மொழிந்து திரு. இரத்தினம் பேசிய சமயம் சபையில் கல்வியமைச்சர் திரு. இரியகொல்லையோ அவரது உதவியமைச்சரோ இருக்கவில்லை.

திரு. இரத்தினத்தின் பிரேரணையை ஆதரித்துப் பேசிய திரு. அமிர்தலிங்கம், இதைச் சுட்டிக்காட்டி கல்வியமைச்சருக்கு சவுக்கடி கொடுக்கவும் தவறவில்லை.

## "எனது தமிழ் வவுனியா எம். பிக்கு விளங்கவில்லை"—இரத்தினம்!

இவ்வளவு முக்கிய பிரச்சினை விவாதிக்கப்படும் போது இச்சபையில் இருக்க வேண்டும் என்று பண்புக்காவது கல்வியமைச்சர் கருதவில்லை. இச்சபை ஏதையாவது தீர்மானிக்கட்டும்—நாம் நினைத்தபடியே தான் நடப்போம் என்று அமைச்சர் கருதுகிறார் என்பதைத் தவிர இதற்கு ஒருவரால் வேறு விளக்கம் கூற முடியாது —இவ்வாறு சாடினார் அமிர்தலிங்கம்.

அமைச்சரின் காதுகளுக்கு எனது பேச்சு எட்டட்டும் என்பதற்காகவே ஆங்கிலத்தில் பேசுகிறேன்' என்றும் விளக்கம் தந்தார் அமிர்.

"சிங்களப் புத்தகங்களைப் போல ஒன்றரை மடங்கு விலையை தமிழ்ப் புத்தகங்களுக்கு விதிப்பது—தமிழ் பெற்றோர்கள் தமிழ்ப்பெற்றோர்களாக பிறந்த பாவத்திற்கு அளிக்கப்படும் தண்டனையா?" என்று குமுறல் நிறைந்த தொனியில் வினாவினார் அமிர்தலிங்கம்.

### இராசதுரை சூடு

வவுனியா பா. உ. திரு. சிவசிதம்பரம் பேசும்போது தமிழரசுக் கட்சியை தேவையில்லாமல் வம்புக்கிழுத்தார். செனட் சபையில் பாடப்புத்தகங்களின் விலையை சமப்படுத்தவேண்டுமென்று டொரிக் டி சூசா பிரேரணை கொண்டுவந்த நேரத்தில் அதை திரு. திருச்செல்வம் எதிர்த்ததாக ஒரு பிரச்சினையை கிளறினார்.

இதற்கு மட்டுநகர் இராசதுரை சுடச்சுடப் பதிலடி கொடுத்தார். செனட் சபையில், அப்பிரேரணை கொண்டுவரப்பட்ட நேரத்தில், தமிழ் பாடப் புத்தகங்கள் விலை குறைக்கப்பட வேண்டுமென்பதை தேசிய அமைச்சராக இருந்துகொண்டே திருச்செல்வம் ஆதரித்ததாக கூறி வவுனியாக்காரரின் வாதத்தைப் பொடிப்பொடியாக்கினார்.

### இரத்தினம் பேச்சு

திரு. இரத்தினம் பேசும்போது கூறியதாவது:—

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலே தமிழுக்கென்று ஒரு பிரிவு இருக்கின்றது. அந்தப் பிரிவிலே தலைவராக இருக்கிறவர் போதிய அளவு கவனமெடுத்து, தமக்குக் கீழே இருக்கிறவர்கள் நல்ல முறையிலே பணியாற்றத்தக்க முறையில் செயற்படாததால் அங்குள்ளவர்கள் தங்களுக்குத் தாங்களே தலைவர்களாகமாறுகின்றனர். அதனால் பல ஊழல்களும் ஏற்படுகின்றன; இவையெல்லாம், அந்தத் திணைக்களத்தில் மூலம்வெளியிடப்படும் புத்தகங்களின் தகுதி, விலை, அவற்றை அச்சிட்டு வெளியிடுவதற்குச் செலவழிக்கப்படும் பணம் எல்லாவற்றையும் பாதிக்கின்றன.

இந்தப் பாராளுமன்றத்திலே வரவு செலவுத்திட்ட விவாதத்தில் நான் பங்குகொள்ளும் பொழுது, வெளியீட்டுத் திணைக்களம் புத்தகங்கள் வெளியிடும் முறை பற்றியும் அவற்றின் விலையை எப்படிக் குறைக்கலாம், அவற்றின் தரத்தை எப்படி உயர்த்தலாம் என்பன பற்றியும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கும்படி கேட்டேன்.

தமிழிலே வெளியிடப்பட்டுள்ள "தமிழ் மலர்" ஒன்பதாம் புத்தகத்திலுள்ள பல குறைகளை நான் சுட்டிக்காட்டினேன். மாணவர்கள் முறையிட்டால், ஆசிரியர்கள் முறையிட்டால், பெற்றோர்கள் முறையிட்டால் நாம் அந்த முறைப்பாடுகளை அதற்காகப் பொறுப்பாக இருக்கும் திணைக்களத் தலைவருக்குத்தான் அனுப்பி வைம்போம். 'தமிழ் மலர்' ஒன்பதாம் புத்தகத்தில் உள்ள குறைகள் பற்றி ஆசிரியர் சங்கங்கள், அறிஞர்கள், பண்டிதர்கள் ஆகியோர் எடுத்துக்காட்டிய குறைகளையெல்லாம் ஒன்று திரட்டி அந்தத் திணைக்களத் தலைவருக்கு அனுப்பியிருந்தேன்.

இந்து மாமன்றம்போன்ற தாபனங்களும் அவற்றை எடுத்துக் காட்டியிருந்தன. அவற்றையெல்லாம் நான் சேர்த்து இப்படிக் குறைகள் இருக்கின்றன; இவற்றையெல்லாம் கவனிக்க வேண்டும் என்று கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளருக்கு அனுப்பியிருந்தேன்.

சில ஆசிரியர்கள், பண்டிதர்கள் என்னிடம் தந்த குறைகளையெல்லாம், இவை தாம் இந்நூலைப் பற்றிச் சொல்லப்படும் குறைகள் என்று திணைக்களத் தலைவருக்கு நான் அனுப்பியதற்கு "நீங்கள் அனுப்பிய குறைகள் எல்லாம் கவனிக்கப்படுகின்றன, குறித்த காலத்தில் அவை திருத்தப்படும்" என்று எனக்கு எழுத்தில் பதில் கிடைத்தது. நான் என்னுடைய குறைகளை அனுப்பவில்லை. பல ஆசிரியர்கள், பண்டிதர்கள் என்னிடம் தந்த குறைகளை ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுங்கள் என்று தான் அனுப்பினேன். இப்படி நான் அனுப்பிய குறைகளை என்னுடைய குறைகளாகக் கருதி வெளியீட்டுக்கும் அனுப்பினார்கள்; வெளியீட்டத்திலிருந்து நான்

(9-ம் பக்கம் பார்க்க)

## இம்மாதம் 22ந் திகதி மூதூர் முதல்வர் அமரர் ஏகாம்பரம் அவர்களின் நினைவு தினமாகும்.



அமரர் ஏகாம்பரம்

முன்னைநாள் திருகோணமலை நகர சபைத் தலைவரும், மூதூர் தொகுதியின் முதல் நாடாளுமன்ற அங்கத்தவரும், தமிழரசுக்கட்சிப் பிரமுகரும், தமிழ்பேசும் மக்களின் அன்புப்பாத்திரமும், வீரத்தியாகியுமான அமரர் திரு. த. ஏகாம்பரம் அவர்கள் மறைந்து 8 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. ஆனால் இன்னும் அவர் நினைவு தமிழ் பேசும் மக்கள் உள்ளத்தில் சுடரொளியாய் பிரகாசித்துக் கொண்டே இருக்கிறது.

உரிமைப் பாதுகாவலரும் அஞ்சா நெஞ்சம் படைத்தவருமாகிய அமரர் ஏகாம்பரம் அவர்கள், ஈழத் தமிழ் பேசும் இனம் அழியாது நிரந்தரமாக வாழவேண்டும் என்றும் தமிழ் மொழியும் தமிழினத்தின் வாழ்விடமும் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும் தமிழ் உரிமைகளைக் கோரி சத்தியாக்கிரக இயக்கம் நடத்தப்பட்ட நேரத்தில், செய்ததொண்டுகளையும் தியாகங்களையும் தமிழ் பேசும் மக்களாகிய நாம் என்றென்றும் மறக்கவே முடியாது. ''பொன்னுடல் அழிந்தாலும் புகழுடல் அழியாது'' என்ற வாக்கியத்துக்கு ஒப்பாக வாழ்ந்தவர் அமரர் ஏகாம்பரம் அவர்கள்.

இவரது தாயகம் கோணேசர் வீற்றிருக்கும் கோணமாமலை. அது வே தமிழ் திருநாடாகிய திருகோணமலை ஆகும். அமரர் ஏகாம்பரம் அவர்கள் திருகோணமலையில் உள்ள செண். ஜோசப் கல்லூரியிலே கல்வி பயின்று அங்கேயே அதிககாலம் ஆசிரியராகவும் கடமையாற்றினார். அமரர் அவர்கள் விளையாட்டுக்களில் மிகவும் ஆர்வமுள்ளவர். உதைபந்தாட்டத்தில் எப்பொழுதும் ஓர் பற்றுக் கொண்டவர். திருகோணமலை மக்கள் இவரை ''தெய்வப் பிறவி'' எனவே கூறுவார்கள்.

திருகோணமலை நகரசபையில் தமிழ் மொழியில் எல்லாசெயலகளையும் நடத்திய பெருமை அமரர் ஏகாம்பரத்தையேசாரும். மேடைப் பேச்சில் மட்டுமன்றி முடிந்தவரை எல்லாவிடயங்களிலும் தமிழ் மொழிக்கே முதலிடம் கொடுத்தார். தமிழ் அரசுக் கட்சித் தலைவராக இருந்த இவருக்கு மறையும் போது வயது 47. 1952-ல் இருந்து திருகோணமலை நகரபிதாவாகவும் கடமையாற்றினார். திருகோணமலையில் உள்ள சந்தை, மணிக்கூட்டுக் கோபுரம், புதிய நகராண்மைக்கழகம் ஆகியன அமரர் ஏகாம்பரத்தின் காலத்திலேயேகட்டப்பட்டன. 1949-ல் இவர் சமாதான நீதவானகவும் கடமையேற்ருர்.

இறுதிவரை இன்பத்தமிழுக்காக உழைத்த இந்த மாவீரரை நாம் ஒருபோதும் மறக்கவே முடியாது. ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற பெரியார் வாக்கின்படி தன் நாட்டில் உள்ள எல்லா இனத்தையும் ஒரு குலமாக மதித்து முத்தமிழ் தளைத்தோங்கும் வண்ணம் தமிழுக்காக தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். ''தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை'' என்ற வாக்கியத்துக்கு ஒப்பாக வாழ்ந்தவர் அமரர் ஏகாம்பரம் அவர்கள். இவரின் ஞாபகார்த்தமாக திருகோணமலை நகரசபை சார்பிலும் திருகோணமலை மக்கள் சார்பிலும் அங்குள்ள பிரபல வீதியொன்று இன்றும் அமரரது பெயர் கொண்டே அழைக்கப்படுகின்றது. அதோடு இவரின் புகழ் அழியாதிருக்க நிறுவப்பட்ட நினைவுச் சின்னம் இன்னும் பொதுமக்கள் பார்வைக்கு இந்துமயானத்தில் இருக்கிறது. அவரை நினைவு கொள்வது தமிழ் மக்களாகிய நம் கடமையாகும்.

இ. சற்குருநாதன்

# அண்ணாவின் 'உ…
# களத்தில் இறங்கப்…

அறிஞர் அண்ணா அவர்கள் கட்டி வளர்த்த திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியாவின் மற்றொரு மாநிலத்திலும் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டது. ஆம், புதுவைமாநிலத்திலும் காங்கிரசை படுதோல்வி அடையச் செய்து விட்டது தி. மு. கழகம். மொத்தம் 30 உறுப்பினர்களைக் கொண்ட புதுவை சட்ட சபையில் 19 இடங்களுக்கு போட்டியிட்ட தி. மு. க. 15 இடங்களையும், 30 இடங்களுக்கும் போட்டியிட்ட காங்கிரஸ் 10 இடங்களையும், 7 இடங்களுக்குப் போட்டியிட்ட

வெற்றி பெற்றிருப்பதானது, கலைஞரின் தலைமையின் கீழ் எதிர்காலத்தில் தி. மு. கழகமும், தமிழ் மக்களும் அடையப்போகும் பெரும் வெற்றிகளுக்கெல்லாம் ஓர் அடையாளமாகவும் திகழுகிறது.

டெல்லி மத்திய அரசின் ஆதிக்கப் போக்கினை எதிர்த்தும் மாநிலங்களுக்கு பூரண சுயாட்சி கோரியும் மாபெரும் கிளர்ச்சி ஒன்றினை இன்னும்மூன்று மாதத்துக்குள் நடத்த சிலம்புச் செல்வர் ம. பொ. சி. தயாராகிவிட்டார். சென்

ம. பொ. சி.யின் ச…ட்சிக் கிளர்ச்சியை தி. மு. கழகம் பரிபூரணமாக ஆதரிக்கும் என்று தெரிகிறது. 'அத்த உணர்வை' தாம் பரிபூரணமாக ஆதரிப்பதாகவும், கிளர்ச்சித் திட்டங்கள் எப்படியிருக்கும் என்பதை அறிந்த பின்பே மேற்கொண்டு எதுவும் சொல்லலாம் என்றும் திரு. கருணாநிதி தெரிவித்து விட்டார்.

மத்திய அரசுக்கு எதிராக ம. பொ. சி. போராட்டம் தொடங்கினாலும் தி. மு. க. ஆட்சிக்குத் தான் தர்ம சங்கடமான நிலை ஏற்படப்

## தமிழ் நாடு சட்ட சபையில் மீண்டும் திராவிட நாடு!

வலது கம்யூனிஸ்ட்டுகள் மூன்று இடங்களையும், சுயேச்சை வாதிகள் இரு இடங்களையும் கைப்பற்றியுள்ளனர். இது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அறிஞர் அண்ணாவின் கொள்கைகளுக்கும் கிடைத்த ஒரு பெரு வெற்றியாகும்.

தமிழ் நாட்டில் நடைபெறும் தி. மு. க. ஆட்சிமீது மக்கள் வெறுப்படைந்து வருகின்றனர் என்று தமிழ் நாட்டு காங்கிரஸ்காரர்கள் நடத்தும் பிரசாரத்துக்குச் சரியானபதிலடியாகபுதுவை மக்கள் தி. மு. கழகத்தினிடமே தங்கள் ஆட்சிப் பொறுப்பையும் ஒப்படைத்து விட்டார்கள்.

அதுவும் தி. மு. கழகத்தின் இயந்திர மனிதர்என்று கூறப்படும் கலைஞர் கருணாநிதி தி. மு. க.வின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்னர் புதுவையில் கழகம்

னையில் அண்மையில் நடந்த தமிழரசுக் கழக மாநாட்டில், கிளர்ச்சித் திட்டங்களை வகுக்கவென ஓர் குழுவும் அமைக்கப்பட்டு விட்டது.

வெளிநாட்டு உறவு, பாதுகாப்பு ஆகிய இரு அதிகாரங்களை மட்டும் டெல்லி வைத்துக் கொண்டு ஏனைய அதிகாரங்களை மாநிலங்களுக்கு வழங்கிவிட வேண்டுமெனவும், அப்பொழுதுதான் இந்தியாவில் உண்மையான சமஷ்டிஆட்சி ஏற்பட முடியுமென்றும் பிரிவினையைத் தடுக்க முடியுமென்றும் ம. பொ. சி. கருதுகிருர்.

பேரறிஞர் அண்ணாவின் கடைசி உயிலும் மாநில சுயாட்சிக்காக கிளர்ச்சி செய்ய வேண்டும் என்பதே. அண்ணாவின் இந்த இலட்சியத்தை நிறைவேற்றும் பொறுப்பை தாமே ஏற்றுக் கொண்டு விட்டார் ம. பொ. சி.

போகிறது. கிளர்ச்சியை அடக்குவதா அல்லது ஆதரவு அளிப்பதா! ஆதரவு அளித்தால் தமிழ் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலைநாட்டப்படவில்லையென்ற சாட்டில் மத்திய அரசு தலையிட முயலாதா! கிளர்ச்சியை அடக்க முயன்ருல்— அது தி. மு. க. வினதும் அண்ணாவினதும் கொள்கைக்கு முரணாகி விடும்.

எனவே, ம. பொ. சி. ஏதாவது நேரடி நடவடிக்கையில் இறங்கினல், அது அவரே விரும்புகிற தி. மு. க. அரசுக்குத்தான் இக்கட்டான நிலையை ஏற்படுத்தும் என்பதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும்.

### சட்டசபையில் மீண்டும் திராவிட நாடு

தமிழ்நாடு சட்டசபையில் மீண்டும் 'திராவிட நாடு' என்ற பேச்சு எழுந்ததை

…ன்மை …டியதா …ழகன், எ… ஆசைத்… சட்ட ச… பேச்சுக்… விட நாடு…

தமிழ்ந… வரவு ெ…



தத்துக்கு… பேசுகை… கன் பின்… டுள்ளா…

''இந்த… களை மத்… வேண்டு… சொல்வ… கேட்கி… னல் அ… நாட்டி… தேசத்… பதைவி… குறைவ…

## 'கொழும்பு மத்தியிலும், தெற்கிலு…

# தமிழரசுக் கட்சி போட்டியிட வேண்டு…

தமிழர்களுடைய அரசியல் நிலையை பொறுத்த வரையில் அவர்கள் முன்னேற்றமடைவதற்கு இடமிருந்தும் தவிக்கிருர்கள். இன்று தமிழர்களின் தலைவராக தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் விளங்குகிருர். அவர் ஓர் தீர்க்கதரிசியென்பதையும் ஒருவராலும் மறுக்கமுடியாது. அத்தோடு அரசியலில் மிகவும் கைதேர்ந்தவரும்கூட. அவரும், அவருடைய கட்சித் தலைவர்களும், மற்றும் அக்கட்சியோடு இணைக்கப்பட்ட பெரியோர்களும் தமிழர்களுடைய, முஸ்லீம்களுடைய முன்னேற்றத்திற்காக அயராது சேவை புரிகின்றனர். அவர்கள் செய்யும் சேவைகள் பெரும்பாலும்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் மக்களுக்குத் தான் என கொள்ளவேண்டியிருக்கிறது.

கிளிநொச்சி தொகுதி பாராளுமன்ற அங்கத்தவர் பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் எங்களுடைய சில குறைகளை நீக்கியுள்ளார். இது உண்மை. ஆனலும் எங்களுக்குரியபல பிரச்சினைகளை அவரால் எவ்வாறு தீர்க்கமுடியும்?

மேற்கு மாகாணத்தில் குறிப்பாக கொழும்பில் வசிக்கும் தமிழர்களுடைய நிலை 1947ல் இருந்து இன்று வரைக்கும் அப்படியேதான் இருந்துவருகிறது. இவர்களுடைய அவலநிலை நீங்கவேண்டுமானல் இவர்கள் சார்பில் பாராளுமன்றத்தில் அங்கம்

வகிப்பதற்கு ஒரு பிரதிநிதி அவசியம் வேண்டும். இவர்களுடைய துயரை ஒருவாறு நீக்குவதற்காகவே தான் கொழும்பு மத்திய தொகுதியும், கொழும்பு தெற்கு தொகுதியும் முறையே மூன்று, இரண்டு அ…கத்தவர்கள் கொண்ட தொகுதியாக தேர்தல் கமிஷனல் சிபார்சு செய்யப்பட்டது.

ஆகையினல் வரப்போகும் பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சி இவ்விரு தேர்தல் தொகுதிகளுக்கும் …ண்டு தமிழர்களை அபேட்சகர்களாக நியமிக்கவேண்டும். கொழும்பு தெற்கு தொகுதியை அண்டிய இடங்களில் வசிக்கும் தமிழர்கள் தங்களுடைய வாக்குகளை கொழும்பு

தெற்கு… மாறு… தமிழரசு… வேண்டு…

இவ்வி… …பட்… ஒரு… தெற்கு… பெறவா… டில் ந… பொதுத்… வண மு… இரண்… …ப்… சந்தர்ப்… களால்… நினவு…

கொழு…

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயிலை' செயற்படுத்த
# ப்போகிறூர் ம. பொ. சி!

ன்மையில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மதியழகன், என். வி. நடராசன், ஆசைத்தம்பி ஆகியோர் சட்ட சபையில் ஆற்றிய பேச்சுக்களின் போது திராவிட நாடு தலை காட்டியது.

தமிழ்நாடு சட்டசபையில் வரவு செலவுத் திட்டவிவா



த்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் திரு. மதியழகன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்த அரசின் உணர்ச்சிகளை மத்திய அரசு மதிக்க வேண்டும். நியாயத்தை சொல்வதால், திராவிடநாடு கேட்கிறூர்கள் என்று கூறினுல் அது சரியில்லை. நமது நாட்டுப் பற்று உத்தரப்பிரதேசத்துக் காரனுக்கு இருப்பதைவிட கொஞ்சமும் குறைவானது அல்ல.

திராவிட நாடு கேட்கவில்லையே தவிர அது கேட்டதற்கானகாரணங்கள் இன்னும் இருக்கின்றன என்று கூறுவதால் எங்களுக்கு ஆபத்து வருகிறது என்ருல் அது பற்றிக்கவலை இல்லை.

மாநிலத்துக்கு அதிக அதிகாரம் கிடைக்க எதிர்க் கட்சியினர் கொஞ்சம் ஒத்துழைப்பு கொடுங்கள். நாம் சேர்ந்து கேட்போம். அரசியல் சாசனம் மாற்றப்பட்டு மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கிடைக்கட்டும்.

இந்த அமைச்சர் வேலை சாசுவதமானது அல்ல.

எழுப்பினுல் திராவிட்நாடு கேட்பதாக கூறுகிறூர்கள் இதற்கு எல்லாம் பயப்படவா போகிறேூம்? திராவிட நாடு என்றுல் என்ன? பாவமா அல்லது பூதமா?

குறித்துவைத்துக் கொள்ளுங்கள். ஒரு காலம் வரத்தான் போகிறது. அந்நிய நாட்டு விவகாரம், பாதுகாப்பு, போக்குவரத்து என்ற 3 அதிகாரங்களையும் தவிர மற்ற அதிகாரங்கள் அனைத்தும் மாநிலத்துக்கு வரத்தான் போகின்றன. அதை விளக்கும் வகையில் தான் பாண்டிச்சேரியில் தி.

## மற்றெருரு இந்திய மாநிலத்தில் அண்ணு வகுத்த ஆட்சி!

மு. க. வெற்றி பெற்றிருக்கிறது".

குடும்பச் சொத்து என்று நாங்கள் கருதவில்லை.

நியாயமான உரிமைகள் கிடைக்க இந்த அமைச்சர் பதவியை அல்ல— எங்கள் ஊன் உடலை தரத் தயாராக இருக்கிறேூம்"

ஏ. வி. பி. ஆசைத்தம்பி பேசுகையில்— 'இந்தித் திணிப்பை டெல்லி கைவிட வேண்டும் அல்லது திராவிட நாட்டை பிரித்து தந்துவிட வேண்டும் என்று கூறியிருக்கிறுர்.

மேல்சபையில் என். வி. என். பேசும்போது பின்வருமாறு கூறினுர். வெளிநாட்டு உறவு, போக்குவரத்து, பாதுகாப்பு ஆகியவற்றைத் தவிர மற்ற அதிகாரங்களை மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டும் இந்தியை எதிர்த்து நாம்குரல்

சென்ற வாரம் சென்னை சட்டக்கல்லூரியில் பேரறிஞர் அண்ணுவின் சிலை திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் கருணுநிதி சொற்பொழிவாற்றினுர் அப்போது அவர் கூறியதாவது:—

அண்ணு குறுகிய காலத்தில் ஆட்சியை பிடித்து முதல்-அமைச்சராக திறமையாக நாட்டை பரிபாலித்தார் என்ற காரணத்துக்காக மட்டும் அவர் சிலை இங்கு திறக்கப்படவில்லை.

தமிழ் நாட்டில் மூவேந்தர்கள் ஆட்சியும், வெள்ளையர்கள் ஆட்சியும் நீதிக்கட்சி ஆட்சியும், கங்கிரஸ் கட்சி ஆட்சியும் நடந்து இருக்கின்றன. இந்த ஆட்சிகளுக்கும், அண்ணுவின் ஆட்சிக்கும் வித்தியாசம் உண்டு.

அண்ணு ஏழைகளின் புன்னகையை மனதில்கொண்டு, அவர்களின் கண்ணீரை துடைப்பதையே லட்சியமகாக் கொண்டு, சாதாரண மானவர்களை தன் படையில் சேர்த்துக் கொண்டு ஆட்சி புரிந்தார். இந்த பெருமை அண்ணு ஒருவருக்குத்தான் உண்டு.

### ஏழைகள் கண்ணீர்!

அண்ணுவின் இறுதி ஊர்வலத்தின் போது. கதறி அழுத லட்சக்கணக்கான பெரும்பான்மையினர் ஏழைகளாகவும், அன்றுடம் காய்ச்சிகளாகவும் இருந்ததே இதற்கு சான்றுகும்.

### மாணவர்கள்

அண்ணு மாணவர்களிடம் அதிக பற்றும் பாசமும் வைத்து இருந்தார்கள்.

மாணவர்கள் இரண்டாவது தடவையாக மொழி போராட்டத்தில் குதித்த போது, எதிர்க கட்சிக்காரர்கள் மாணவர்களுக்காக சட்டசபையில் தீர்மானம் போடுவதா என்று எதிர்த்த போதிலும் 'மாணவர்கள்

## சென்னைக் கடிதம்

என் சதையின் சதை-ரத்தத்தின் ரத்தம்' என்று கூறினுர். இதை உணர்ந்து தானே என்னவோ அண்ணு உடல் நிலை குன்றி ஆஸ்பத்திரியில் இருந்த போது, மாணவர்கள் ரத்தம் கொடுத்தார்கள்.

### பணி புரிவேன்

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய மூன்றை கொடுத்த அண்ணு நாலாவதாக என்னையும் உங்களிடம் ஒப்படைத்து, 'கருணுநிதி என்னேடு வந்து சேரும் வரை பார்த்துக் கொள்ளுங்கள்' என்று விட்டு சென்று இருக்கிறுர். அவர் இடத்தை நிரப்ப என்னுல் முடியாது என்ருலும், கூட்டு தோழர்களின் ஆதரவுடன் என் பணியை செய்வேன்.

### தாயில்லாப் பிள்ளை

ஒரு வீட்டில் அறுசுவை உணவை சமத்து பரிமாறும் தாய் இறந்து விட்டால் அந்த வீட்டில் சிற்றுடை கட்டிக் கொண்டு இருக்கும் சிறுமி சமையல் வேலையில் ஈடுபடுவாள். அந்த சமையல் ருசி இல்லாவிட்டாலும் தாயில்லாத பிள்ளை சமைத்த சமையல் என்ற அனுதாபத்தோடு அந்த உணவை உண்பார்கள்.

அதைப் போலவே நான் செய்யும் காரியம் உங்களுக்கு முழு திருப்தி அளிக்காவிட்டாலும் தாயில்லாத பிள்ளையின் சமையலை ஏற்பதைப் போல ஏற்றுக் கொள்ள வேண்டும்.

---

## கிலும்

## டும்!

தெற்கு தொகுதியில் பதியுமாறு வேண்டிக்கொள்ள தமிழரசுக்கட்சி முன்வர வேண்டும்.

இவ்விதம் ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் கண்டிப்பாக ஒரு தமிழர் கொழும்பு தெற்கு தொகுதியில் வெற்றி பெறலாம். 1947ம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத்தேர்தலில் திரு. சரவணமுத்து போட்டியிட்டு, இரண்டாவது இடத்தை கைப்பற்றி வெற்றியீட்டும் சந்தர்ப்பத்தை சில வாக்குகளால் இழந்தாரென்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

கு அழகரத்தினம்,
கொழும்பு.

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடம் ஒரு கேள்வி!

அறிஞர் அண்ணுவின் பிரிவு குறித்து ஒரு மாதத்தின் பின் 2-3-69ல ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் பழஞ்சலிப்பு நிகழ்ச்சி யொன்றை ஒலிபரப்பியது. இரண்டு அரசியற் கட்சிகளின பாராளுமன்ற உறுப்பினர் இருவரும் நியமன பா. உறுப்பினர் ஒருவரும் இந்நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டனர் இவர்களுடன் 'தினபதியின்' மன்னிக்கவும் "பொய்ப் பதியின்" ஆசிரியரும், வேறேூர் அன்பரும் கலந்து கொண்டனர்.

பாராளுமன்றத்தில் அறிஞர் அண்ணுவுக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றுவது சம்பந்தமாக ஒரு விஷப் பிரச்சினை கிளப்பி நச்சுப் பொய்களைசிருட்டித்து எழுதி அண்ணுவுக்கு அகௌரவத்தை உண்டாக்கி இலங்கைத் தமிழர் முகத்தில் கரியைப் பூசிய தினபதியின் ஆசிரியரை ஏன் அழைத்தார்கள்?

ஐந்து தமிழ்த் தினசரிகள் இலங்கையில் உள. இவற்றின் ஆசிரியர்கள் எல்லோரையும் அழைக்காமல் பொய்ப்பதியின் ஆசிரியரை மட்டும் அழைத்த காரணம் யாது?

அண்ணுவுக்கு அகௌரவத்தையுண்டாக்கிய பழியையும் பாவத்தையும் போக்குவதற்குஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தாரிடம் கெஞ்சிக்கேட்டுப் பெற்றபேறு? ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலுள்ள தினபதியாசிரியரின் கையாட்கள் இருவரின் சூழ்ச்சியா? தமிழ் மக்களின் கண்ணில் மண்ணைத் தூவி மயக்க முற்பட்ட எட்டப்பர் கூட்டத்தினரை சந்திக்கிழுத்து, முகமூடியைக் கிழித்து, போலிவேடத்தை களைவது அறிஞர் அண்ணுவைப் போற்றுவோரின் கடனுகும்.

தமிழ்மாறன்.
யாழ்ப்பாணம்.

## குயில் பாட்டு ஆராய்ச்சி உரை!

இம்மாதம் 18ந் திகதி மாலை கொழும்பு ஜிந்துப் பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் பாரதியின் குயில்பாட்டு பற்றி திரு. ஈழவேந்தன் அவர்கள் ஆராய்ச்சியுரை நிகழ்த்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தினபதி' ஏட்டின் தமிழ்த் துரோகத்தை அம்பலப் படுத்துகிருர் அதன் மாஜி நிருபர்!

தமிழரசுக் கட்சிக்கு எதிராகவும் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமைக் கோட்டையை உடைக்கும் நோக்குடனும் குணசேன நிறுவனத்திலிருந்து வெளியி ப்படும் 'தினபதி' என்னும் நாள் ஏடு முழுப்பொய்ச் செய்திகளையும் கற்பனைச் செய்திகளையும் வெளியிட்டு கயிறு திரித்து வருவதை சுதந்திரன் அடிக்கடி வெட்ட வெளிச்சமாக்கி தமிழ்த் துரோக ஏடான தினபதியின் முகமூடியை கிழித் தெறிந்து வருவதை வாசகர்கள் அறிவார்கள்.

தமிழரசுக் கட்சியைப் பற்றி தினபதியில் வெளிவரும் செய்திகள் பெரும்பாலும் அலுவலகத்திலேயே தயாரிக்கப் படுவதாகவும், நிருபர்கள் அனுப்பும் செய்திகள் கூட அங்கு உருமாற்றம் கருமாற்றம் எல்லாம் செய்யப்பட்டே பிரசுரிக் கப்படுவதாகவும் நாம் பட்டவர்த்தனமாகக்கூறிவந்தோம்.

இதோ, நாம் கூறுவது எவ்வளவு தூரம் உண்மையானது என்பதையும், பத்திரிகா தர்மங்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு தினபதி செய்யும் பச்சை துரோகம் எத்தகை யது என்பதையும் தினபதியின் மானிப்பாய் நிருபராக (நிருபர் இல 192) இரு ஆண்டுகள் பணியாற்றி அதன் போக்குப்பிடிக்காமல் அதிலிருந்து வெளியேறிய திரு பொ. சண்முகநாதன் எடுத்துக் கூறி 'தினபதியின்' சுய உருவை மக்கள் முன் காட்டுகிருர்.

தினபதி ஆசிரியருக்கு திரு. பொ. சண்முகநாதன் எழுதிய விலகல் கடிதத்தின் பிரதியை இங்கு அப்படியே பிரசுரிக் கிறோம். தினபதியின் தரங்கெட்ட தன்மையை வாசகர் கள் கண்டு கொள்வார்களாக'

## "அனுப்பப்படும் செய்திகள் திரித்து வெளியிடப்படுகின்றன

## தினபதி பெயரைக் கேட்டாலே மக்கள் வெறுக்கிருர்கள்"

ஆசிரியர்,
'தினபதி'
5, குணசேன மாவத்தை,
கொழும்பு 12.

அன்புடையீர்!

'தினபதி' ஆரம்பிக்கப் பட்டபோது தொடக்கம் நான் அதன் மானிப்பாய் நிருபராகப் பணியாற்றி வருவது தாங்கள் அறிந்ததே. ஆனலும் சென்ற ஆண்டு ஆகஸ்ட் இரண்டாம் நாளிலிருந்து நான் பத்திரிகைக்கு எந்த ஒரு செய்தியும் அனுப்பாமல் இருந்து வருவதிலிருந்தே என்னைப் பற்றித் தாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருப்பீர்களென நினைக்கின்றேன்.

'தினபதி' தொடங்கிய சில நாட்களிலேயே அது ஒரு தமிழ்த் துரோகப் பத்திரிகை என்பதைப் புரிந்து கொண்டேன். அது தமிழரசுக் கட்சியையும் அதன் தலைவர்களையும் அநாவசியமாகத் திட்டமிட்டு வேண்டுமென்றே பொய்ச் செய்திகளை வெளியிடுவதன் மூலம் வம்புக்கிழுத்து வருகின்றது.

தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் பொய்யானதும் கற்பனையானதுமான செய்திகளை வெளியிடுவதன் மூலம் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் மீது, தமிழ் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தி விடலாமென்று கனவு காணுகின்றீர்கள். ஆனல் இதையெல்லாம் சிந்திக்கத் தெரிந்த மக்கள் எவரும் நம்பத் தயாராக வில்லை. அப்படியே 'தினபதி'ச் செய்தி உண்மையாக இருந்தால் அதை ஏனைய தமிழ் தினசரிகளும் அன்றே வெளியிட்டிருக்க வேண்டும்? அவைகள் ஒன்றும் தமிழரசுக்கட்சி சார்பானதோ அல்லது தமிழரசுக் கட்சியின் வளர்ச்சியில் ஆர்வங் கொண்ட பத்திரிகைகளோ அல்லவே! அப்படி இருக்கும்போது அவைகளே வெளியிடாத செய்திகளை 'தினபதி' மட்டும் வெளியிடுகிறதென்ருல் அவைகள் பொய் இல்லாமல் - கற்பனையில்லாமல் வேறு என்னவாம்?

பத்திரிகை நிருபர்களாக இருப்பவர்களுக்கு மக்கள் மத்தியிலே ஒரு தனி மதிப்பும் கௌரவமும் உண்டு: ஆனல் உங்கள் 'தினபதி' நிருபர்களாக இருப்பவர்களுக்கோ இதெல்லாம் தலைகீழாகவே இருக்கும். இரண்டு ஆண்டுகள் 'தினபதி'க்குச் செய்திகள் சேகரித்து அனுப்பிய அனுபவங்களைக் கொண்டு சொல்லுகின்றேன். அதன் பெயரைக் கேட்டாலே மக்களில் பலர் 'காறித் துப்பாத' குறையாக ஒதுங்கிப் போகிருர்கள்.

பலர் நேரடியாகவே எம்மிடம் "'தினபதி'க்கு நாங்கள் செய்திகள் தர விரும்பவில்லை" என்றும் "'தினபதி'யில் எங்கள் செய்திகள் வருவதை நாம் விரும்பவில்லை" என்றுஞ் சொல்லியிருக்கிருர்கள். ('எம்மிடம்' என்று எதற்காக இந்தஇடத்தில் பன்மையில் குறிப்பிடுகிறேன் என்கிறீர்களா? 'தினபதி நிருபர்களாகப் பணியாற்றி வரும் எனது நண்பர்களில் சிலர் கூட 'தமக்கும் இத்தகைய அனுபவங்கள்! ஏற்பட்டதாக என்னிடம் குறிப்பிட்டிருக்கின்ருர்கள்)

'தினபதி' பற்றிய மக்கள் அபிப்பிராயம் அப்படி இருந்தும், அதைநானே ஒத்துக் கொண்டுங்கூட சென்ற 'ஆவணி இரண்டாம் நாள்' வரை நான் அதற்குச் செய்திகள் அனுப்பிக் கொண்டே இருந்தேன். 'பொய்யானதும் கற்பனையானதுமான தமிழ்த் துரோகச் செய்திகளை அனுப்பாதவரை 'தினபதி'யின் போக்குக்கு நான் உடந்தையானவனாக முடியாது தானே! என என்னை நானே தேற்றிக் கொண்டு தான் அப்படிச் செய்து வந்தேன். ஆனல் கடைசியில் என்னுடைய செய்தியிலேயே 'கைவண்ணம்' காட்டும் அளவிற்குச் சென்ற ஆகஸ்ட் மாதத்தில் தங்களுக்குத் துணிச்சல் வந்து விட்டது.

மானிப்பாய் புனித அன்னம்மாள் ரோமன் கத்தோலிக்க பாடசாலையின் பெற்ருேர் தின விழாவின் போது எமது உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தருமலிங்கம் அவர்கள் ஆற்றிய உரையினை ஒரு சிறு செய்தியாக 'தினபதி'க்கு அப்போது அனுப்பியிருந்தேன். அச்சிறு செய்தியானது நானே ஆச்சரியப்படும் அளவிற்கு திரிக்கப்பட்டுப் பெரியதாக்கி 'ஆவணி இரண்டு 'தினபதி' யில் முன் பக்கத் தலைப்புச் செய்தியாக இடம் பெற்றிருந்தது. என்னுடைய சம்மதமின்றி உருமாற்றஞ் செய்யப்பட்ட அச்செய்தியில்திரு. தருமலிங்கம் அவர்கள் உண்மையில் கூட்டத்தில் பேசியதை விட பேசாதவைகளே அதிகமாக இடம் பெற்றிருந்தன.

அந்தத்திரிப்புச் செய்தியால்யார்யார்பாதிக்கப்படுவார்கள் என்று நீங்கள் எண்ணியிருந் தீர்களோ அதுநடக்கவில்லை. 'தினபதி'ச் செய்தி தானே' என்று அவர்கள் எல்லோரும் வாழாவிருந்து விட்டார்கள். ஆனல் உண்மையில் பாதிக்கப் பட்டவன் நான் தான். 'தினபதி'க்குப் பொய் செய்திகள் அனுப்புபவர்களில் பொ. சண்முகநாதனும் ஒருவர்' என்று பலர் பேசும்படியான நிலைமைக்கு ஆளாக்விட்டீர்கள்' அந்தச் செய்திக்குமெனக்கும் சம்பந்தமில்லை. அது 'தினபதி' அலுவலகத்தில் தயாரிக்கப்பட்ட செய்தி நான் அனுப்பியது அதில் ஒருபகுதி மட்டுந்தான் என்று அந்தப் பகுதியையும் குறிப்பிட்டுச் சொல்லித்திரிய வேண்டி வந்து விட்டது.

மேற்படி தங்கள் திருவிளையாடல்களுக்குப் பின் நான் இதுகாலவரை 'தினபதி'க்கு எந்தச் செய்திகளும் அனுப்பாமல்—அதனுடன் எந்த விதத்தொடர்புங்கொள்ளாமல் இருந்து வருகின்றேன்.

இப்படியே தொடர்ந்து நான் அமைதியாக இருந்தால் 'தினபதி' நிருபராக இருப்பதற்கு இவன் கொஞ்சங்கூட தகுதியில்லை, என்ற சங்கதி தங்களுக்குத் தெரியாமல் போய்விடுமல்லவா? அதனல்தாங்கள் என்னையே நம்பிக்கொண்டு அதற்குத் தகுதியான வேறுஒருவரை நியமிக்காமலே இருந்து விடுவீர்களல்லவா? இதற்காகத்தான் இத்தனை காலமாக நான் கடைப்பிடித்து வந்த மௌனத்தைத் திடீரென்று கலைத்துவிட்டு இந்த விலகல் கடிதத்தை, அதற்கான காரணங்களோடு ஆதியோடு அந்தமாக எழுதலுற்றேன்.

'தினபதி'யின் சுய உருவமும் இப்பொழுது நன்ருக, வெளிப்பட்டுக்கொண்டு வருகின்றது. வகுப்பு வாதமும் இனவெறியுங் கொண்ட ஒரு கோட்டையிலிருந்து வெளிவரும் 'தினபதி' தமிழுக்கோ தமிழனுக்கோசேவை செய்ய முன்வரவில்லை. மாருகத் தமிழனை அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லத்தான் வந்திருக்கிறதென்பதை மக்கள் புரிந்து விட்டார்கள். சுருக்கமாகச் சொல்லின் 'தினபதி'பற்றி 'சுதந்திரன்' ஏடு குறிப்பிடுவதெல்லாம் நூற்றுக்கு நூறுவீதமும் உண்மையே. இதையும் 'தினபதி' நிருபராக இருந்த அனுபவத்தைக் கொண்டு தான் சொல்லுகினறேன். 'தினபதி' நிருபராக இருந்தவனே இப்படிச் சொல்லுகின்ருன்' என ஆத்திரப்பட்டுப் பயனில்லை.

'தினபதி'யின் போக்குத் தொடர்ந்தும் இப்படியே இருந்தால் இன்னும் சில காலத்தில் மககளின் வெறுப்பு 'தினபதியால் சுற்றிய பண்டங்களைக் கூடத் தொட மறுக்கும்" அளவிற்கு வளர்ந்து விடும். அப்பொழுது ஒரு காலத்தில் 'தினபதி' நிருபராக இருந்து விட்டதற்காக நானும் மிக மிக வருந்த வேண்டி இருக்கும்.

அன்பன்,
(ஒ.ம்) பொ. சண்முகநாதன்
(நிருபர் இல, 192)

## 'தினபதி' அடித்த மற்ருெரு பச்சைப் பொய்!

மீண்டும் ஒரு பச்சைப் பொய்யைக் கொட்டை எழுத்துக்களில் வெளியிட்டிருக்கிறது தினபதி. தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. பாராளுமன்றத்தில் பேசும்போது குணசேன கம்பெனிக்குப் புகழ்மாலை சூட்டியதாக ஓர் முழுப் பொய்யை வெளியிட்டிருக்கிறது தினபதி.

"புத்தகங்களைத் தனியார் நிறுவனங்கள் வெளியிட்டபோது சிறப்பானதாக இருந்தன. அதிலும் எம். டி. குணசேன கம்பெனி அச்சிட்டு வெளியிட்ட புத்தகங்கள் அழகாகவும் செலவு குறைந்ததாகவும் இருக்கின்றன."

—இவ்வாறு திரு. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் கூறியதாகத் தினபதி மார்ச் 7-ந் திகதி ஓர் செய்தியை "குணசேன கம்பெனிக்கு அமிர்தலிங்கம் பாராட்டு—நல்ல புத்தகங்களை வெளியிடுவதாக"—என்ற தலைப்புடன் வெளியிட்டு இருந்தது.

ஆனல் திரு. அமிர்தலிங்கம் கூறியதென்ன? இதோ அதை 6-3-69 பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பேட்டின் 2795ம் பத்தியிலிருந்து கீழே தருகிறோம்.

In the former days when textbooks were published by private publishers there was hardly any difference in the prices of Sinhala and Tamil textbooks. For instance, there were textbooks which were published by firms like M. D. Gunasena & Co. They published textbooks in Sinhala as well as in Tamil and the prices were almost equal.

மேலே கூறப்பட்ட வார்த்தைகள் தான் திரு. அமிர்தலிங்கத்தின் வாயிலிருந்து வந்தவை. இதன் பொருள்:-

"தனிப்பட்ட நிறுவனங்களால் பாட நூல்கள் வெளியிடப்பட்ட முன்னுட்களில் சிங்கள - தமிழ் பாடநூற்களுக்கிடையே விலையில் ஏற்றத் தாழ்வு இருக்கவில்லை. உதாரணத்துக்கு எம். டி. குணசேன கம்பெனி போன்ற நிறுவனங்கள் தமிழ் சிங்கள பாடநூற்களை வெளியிட்டன. அவை அநேகமாக ஒரே விலையுடையனவாக விளங்கின."

இதற்கும் தினபதி வெளியிட்ட செய்திக்கும் எத்தனை வேறுபாடு காணப்படுகிறது என்பதைத் தமிழ் மக்கள் கண்டு கொள்வார்களாக!

## வாசகர்கவனிக்க

தவிர்க்க முடியாத காரணங்களால், இவ்வாரம் கவிஞர் காசி ஆனந்தன் படைக்கும் அண்ணு காவியமும் தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் எழுதவிருந்த அரசியற் கட்டுரையும் இடம் பெறவில்லை. அடுத்த வாரம் இவையிரண்டும் இடம் பெறுமென்பதை அறியத் தருகிறோம்.

—ஆ—ர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் தாபனம் தமிழை புறக்கணிப்பதேன்?

## துறைமுகக் கூட்டுத்தாபன தலைவருக்கு தமிழியக்கம் ஆட்சேபம்!

துறைமுகக் கூட்டுத் தாபனத்தால் முற்றுமுழுதாக தமிழ்ப்புறக்கணிப்பு நடத்தப்பட்டு வருகிறது. கூட்டுத் தாபனத்தின் இப்போக்கினை கடுமையாக ஆட்சேபித்து நடைமுறைத் தமிழ் இயக்கம் கூட்டுத்தாபனத்தலைவருக்கு ஓர் கடிதம் எழுதியுள்ளது.

நடைமுறைத்தமிழியக்கத் தலைவர் திரு. க.இளையதம்பி கையெழுத்திட்டு அனுப்பியுள்ள இக்கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

துறைமுகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட 1969ம் ஆண்டுக் கலண்டர் முற்றிலும் சிங்களத்தில் இருந்தபடியால், கொழும்பு, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் பணியாற்றும் பெருந்தொகையான தமிழ் பேசும் ஊழியர்கள் இதனைத் தங்களுக்குத் திருப்பியனுப்பியுள்ளதாக எமக்கு முறையிடு செய்துளளனர். துறைமுகத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் தமிழ் பேசும் ஊழியர்கள் அவ்வாறு நிந்திக்கப்படுவதேன்?

பின்வருவன வற்றிலும் தமிழ் புறக்கணிக்கப்படுவதாக எமக்கு முறையீடு செய்யப்பட்டிருக்கிறது.

துறைமுகத்திலுள்ள கடிதத் தலைப்புகள், விண்ணப்பப் படிவங்கள் சில பகுதிகளில் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், துறைமுக ஊழியர்கள் நலன் கருதி வெளியிடப்படும் 'எங்கள் துறைமுகம்' வாராந்த வெளியீடுகள், மற்றும் சில சுற்று நிருபங்கள்முதலியன.

திருகோணமலைத் துறைமுகத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அனுப்பப்படும் 'எங்கள் துறைமுகம்' என்னும் மாதாந்த வெளியீடு தனிச் சிங்களத்தில் இருப்பதாகப் பல ஊழியர்கள் முறையீடு செய்துள்ளனர். துறைமுக முன்னேற்றத்திற்கான தங்களது அபிப்பிராயங்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படுவதில்லையாம்.

எமது இயக்கத்திற்கு கிடைத்துள்ள தகவல்களின்படி "தமிழ் மொழிச் சிறப்புச் சட்டப் பிரமாணங்கள் 1966" கூட்டுத்தாபனத்தில் செவ்விய முறையில் அமுல் நடத்தப்படுவதில்லையென அறியக்கிடக்கிறது. அரசாங்கக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் கூட்டுத்தாபனத்தால் ஏன் இவ்வாறு தமிழ் புறக்கணிக்கப்படுகிறது.

பல எதிர்ப்புகளிடையே திருகோணமலை துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டபோது 'சிங்கள மொழி தெரியாத ஊழியர்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டார்கள்' எனக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி மீறப்படுவதேன்?

சட்டபூர்வமாகத் தமிழ் அங்கீகரிக்கப்பட்ட விடயங்களில் தமிழ் புறக்கணிக்கப்படுவதை இவ்வியக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஆகவே மேற்கூறிய குறைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என உறுதியளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இக்கடிதத்தின் படிகள் தேசியமயசேவைகள் அமைச்சர், எஸ். ஜே. வி. செல்வநாயகம், பா. உ. எம். சிவசிதம்பரம், பா. உ. கா. பொ. இரத்தினம் பா. உ. பொது முகாமையாளர். வர்த்தக முகாமையாளர்; தொழிற்படு இயக்குநர் (திருகோணமலை) இலங்கைத் துறைமுகத் தொழிலாளர் கழகம் (திருகோணமலை) ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## எல்லாந் தமிழியக்கம் தீவிரமடைகிறது!

எல்லாந் தமிழியக்கத்தினர் மீண்டும் தமிழியக்கத்தைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் மறை தந்த திருவள்ளுவரின் 2000 ஆண்டு நிறைவையும், அண்ணா மறைவையும் ஒட்டி வள்ளுவரின் தெள்ளு தமிழ்பாடல்களையும், அண்ணாவின் அறிவுரைகளையும் அமரர் வன்னியசிங்கத்தின் போதனைகளையும் கொண்ட ஆயிரக்கணக்கான கடித உறைகளை எல்லாந் தமிழியக்கம் வெளியிட்டுள்ளது. இக்கடித உறைகள் இப்போது பெருவாரியாக விற்பனைக்கு வந்துள்ளன.

தமிழுணர்வைத் தூண்டிவிடும் வாசகங்கள் கடித உறைகளை அலங்கரிக்கின்றன.

### இலங்கையிலும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வாரங்கள் கழிந்து விட்டன. சுற்றறிக்கையை நிர்வாக ரீதியாக நடைமுறைப் படுத்த இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை.

தமிழ் மொழிப் பிரமாணங்களை அமுல் நடத்தக் கூடிய விசேட அதிகாரிகளும் எழுது வினைஞர்களும் தமிழ் தட்டச்சாளர்களும் சகல அரசாங்க அலுவலகங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் உடனடியாக நியமிக்கப்படவேண்டும். இதற்கு சிறிது தாமதம் ஏற்படும் என்று அரசாங்கம் சமாதானம் சொல்லலாம்.

#### இதில் என்ன சிரமம்?

ஆனால், அரசாங்க அலுவலகங்களிலுள்ள பெயர்ப் பலகைகள், குறிப்பலகைகளில் தமிழையும் உடனடியாக எழுதுவதில் என்ன சிரமமிருக்கிறது என்று ஆட்சியாளரைக் கேட்கிறோம். தலைநகரிலுள்ள பல அரசாங்க அலுவலகங்களில் கூட இன்னும் தமிழ் இடம் பெறவில்லை. தமிழ் மொழி சுற்றறிக்கையை வெளியிட்ட திறைசேரியில் கூட தமிழுக்கு இடமளிக்கப்படவில்லை;

#### போராட்டம் தொடரும்

அரசாங்கத்துக்கு ஒன்று கூற விரும்புகிறோம். தமிழ் மொழிப் பிரமாணங்களை விளக்கும் சுற்றறிக்கைமூலம் எல்லாம் கிடைத்துவிட்டதாக தமிழ் மக்கள் கருதவில்லை. இத்துடன் மொழிப் பிரச்சினையே முடிந்து விட்டதாகவும் தயவு செய்து கருதவேண்டாம். தமிழுக்கு சிங்களத்துடன் சம அந்தஸ்து கிடைத்து— தமிழ் முடிசூடும் வரை இந்த நாட்டிலே தமிழ் மக்களின் மொழிப் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

ஆனால், தமது நல்லெண்ணத்தை அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு காட்ட வேண்டுமென்று கருதினால், தமிழ் மொழிச் சுற்றறிக்கையை உடனே அமுல் நடத்த ஒழுங்கு செய்ய வேண்டும். தவறினால், மீண்டுமொருமுறை தமிழ்பேசும் மக்களின் ஆதரவை அரசாங்கக் கட்சி பெறுவது துர்லபம் என்பதை அழுத்தம் திருத்தமாக இப்பொழுதே கூறிவைக்க விரும்புகிறோம்.

## தமிழ் நாடு சட்டமன்றத்தில் எல்லாந் தமிழ் மயம்!

தமிழ்ப்புலவரான திரு. கோவிந்தன் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட பின்னர், சட்டமன்ற நிகழ்ச்சிகள் யாவும் தமிழ் மயமாகிவிட்டன.

இதுவரை ஆங்கிலத்தில் கூறப்பட்டு வந்த சபாநாயகர் வரவை அறிவிக்கும் கட்டியம் இப்பொழுது தூய தமிழில் 'மாண்பு மிகு பேரவைத் தலைவர் வருகிறார்' என்று தமிழிலேயே அறிவிக்கப்படுகிறது.

தமிழரசுக் கழகத்தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களின் ஆலோசனையின் மீதுதான் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு கட்டியம் மாற்றப் பட்டுள்ளது.

### நா காக்க...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பிய குறைகளுக்குச் சண்டமாக ஒரு நூலும் வெளியிடப்பட்டது. திணைக்களத்திலே இப்படிப் பட்ட ஊழல்கள் நடந்திருக்கின்றன.

இப்படிப்பட்ட குறைகளைக் கவனியாமல், புத்தகங்களின் விலைகளைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்காமல், பலமுறை ஒப்பு நோக்குவதனாலே, பலமுறை திரும்பத் திரும்ப அச்சுக் கூடத்துக்கு அவற்றை அனுப்புவதனாலே நிர்வாகம் நல்ல முறையிலே தொழிற்படாமையாலே புத்தகங்களின் விலைகள் கூடிக் கொண்டுபோகின்றன. ஆகவே, இரண்டு வகையான திருத்தங்களைச் செய்தால்தான் புத்தகங்களின் விலையைக் குறைக்க முடியும். முதலில் அந்தப் பகுதியின் நிர்வாகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும். வால், தலையை ஆட்டும் நிலை அங்கே இருக்கிறது. அதை நீக்கி நிர்வாகம் செம்மையாக நடக்கக் கூடியதாகச் செய்ய வேண்டும். இதற்குப் பொறுப்பாக இருக்கும் ஆணையாளரும் கல்வி அமைச்சரும் நிர்வாகத்தைச் செம்மையான நிர்வாகமாக்க உண்மையில் கவனமெடுக்க வேண்டும்.

இரண்டாவதாக சிங்கள, தமிழ்ப் புத்தகங்களை பிழையில்லாமல் அட்சிடத்தக்கதாக தகுதியுள்ளவர்களிடத்தில் பொறுப்பைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் பல நூல்கள் அச்சிடப்பட்ட பின் பிழைகள் இருக்கின்றன என்று அழிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றையெல்லாம் யாரிடம் போய்முறையிடுவது? இதற்கெல்லாம் ஏழை மாணவர்களது பணமும் ஏழை வரியிறுப்பாளர்களுடைய பணமும்தானே விரயமாகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகையால் சிங்களம், தமிழ் என்று பிரிக்காமல் ஒரே திணைக்களம் வெளியிடுவதால் சகல நூல்களின் விலையையும் சமமாக நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

### யூ. என். பிக்குள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனமுடைந்ததாகவும் அறியப்படுகிறது.

• அண்மையில் குளியாப்பிட்டியில் நடைபெற்ற யூ. என். பி. மாநாட்டில் தனது கட்சியிலுள்ள சர்வாதிகார ஆசை படைத்தவர்கள் என்று பிரதமர் குறிப்பிட்டது தம்மீது தொடுக்கப்பட்ட மறைமுகத் தாக்குதல் என்று மாற்றுக் கோஷ்டியினர் கருதியதாகவும் சொல்லப்படுகிறது. இது எரியிற நெருப்பில் எண்ணெய் வார்த்த கதை போலாகிவிட்டதாம்.

பிரதமரின் போக்கினால் விரக்தியடைந்த இக்கோஷ்டியினர் கடந்த வாரம் அரசாங்கத்தை விட்டு வெளியேறி எதிர்க்கட்சிக்குச் சென்று அமர்வதற்கு கூட முடிவு செய்ததாகவும், பின்னர் கட்சியிலுள்ள நடுநிலையாளர்கள் சமாதானம் பேசியதாகவும் சொல்லப்படுகிறது.

அத்தகையதொரு நிலை எழக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்பட்டால், உடனடியாகப் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலுக்கு செல்வதற்குப் பிரதமர் தயாராக இருப்பதாகவும் அறியப்படுகிறது.

யூ. என். பிக்குள் விரிசலடைந்துள்ள இப்பிளவு விரைவில் எரிமலையாக வெடிக்கலாமென்றும், எதிர் காலத்தில் மேலும் மேலும் இதை முடிவைப்பது சாத்தியமில்லையென்றும் அரசியல் வட்டாரங்களில் விமர்சிக்கப்படுகிறது.

### அரசாங்க.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் கொள்கைக்கு முரணானது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

அண்மையில், மத்திய வங்கி விசாரணைப் பகுதியைச் சேர்ந்த ஓர் தமிழ் ஊழியர், படிவமொன்றை தமிழில் நிரப்பும்படி அங்கு வந்த தமிழ்ப் பொது மகனிடம் கூறியது பற்றி மேலிடத்தால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என்றும் அறியப்படுகிறது.

## மொழிச் சுற்றறிக்கையை முறியடிக்க முயற்சி!

தமிழ் மொழிஉபயோகம் சம்பந்தமாக திறைசேரி வெளியிட்டுள்ள புதிய சுற்றறிக்கையை வாபஸ்பெறும்படி அரசாங்கத்தை நெருக்கும் ஓர் இயக்கத்தில் 'தினபதி' 'சண்' 'தவச' போன்ற பத்திரிகைகளை வெளியிடும் குணசேன நிறுவனம் இறங்கியுள்ளது.

இதே பத்திரிகை நிறுவனம்தான் மாவட்டசபை மசோதாவுக்கு எதிராக பெருங்கிளர்ச்சி நடத்தி அதை முறியடிப்பதில் முன்னின்றதென்பது தெரிந்ததே

## திருமண அழைப்பு.

**மணமகன்:**

திருநிறை செல்வன் சி. க. சண்முகநாதன்
(தலைவர், வண்ணைத் தமிழரசு வாலிப முன்னணி.)

**மணமகள்:**

திருநிறை செல்வி மா. சு. நாகேஸ்வரி

மணநாள்: திருவள்ளுவர் ஆண்டு 2000 பங்குனித் திங்கள் 10ம் நாள் (23-3-69) ஞாயிற்றுக் கிழமை பின்னிரவு 2 மணி.

இடம்: காரைக் காடு, வண்ணார் பண்ணை மேற்கு. தமிழ் முறைப்படி நடைபெறும் இத்திருமண விழாவுக்கு உறவினர்கள், அன்பர்கள், தமிழரசுக் கட்சிப் பிரமுகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பாளர்:

சி. கணபதிப்பிள்ளையும் துணைவியாரும்,
(மணமகன் பெற்றோர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழைப் பழித்த கனக விசயர்கள் கல் சுமந்த வரலாற்றை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்!

## சிங்கள இனவெறியர்களுக்கு தமிழரசுவாலிபர் எச்சரிக்கை!

'அண்ணாவை அவமதிக்கும் சிங்கள இனவெறியர்களே! தமிழைப்பழித்த ஆரிய மன்னர்களான கனக விசயர்கள் அன்று கல்சுமக்க வேண்டியேற்பட்ட வரலாற்றை மறந்து விடாதீர்கள்! ஆரிய—சிங்கள இனவெறிக்கு இளந்தமிழர்கூட்டம் ஒருபோதுமே அடங்கி விடாது'

—இவ்வாறு எச்சரித்திருக்கிறார் தமிழரசு வாலிப முன்னணியின் நிர்வாகச் செயலாளர் திரு. அறிவழகன்.

திரு. அறிவழகன் வெளியிட்டுள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:—

"ஆறு கோடி தமிழ்த் தம்பிகளின் அண்ணா அறிவுலக மேதை தென்னாட்டுக் காந்தி—தமிழ் நாட்டின் பேரறிஞர்—திராவிடத்துத் தலைமகன்—இருபதாம் நூற்றாண்டின் தமிழன்னை பெற்ற தவப் புதல்வனும் வள்ளுவன்—தமிழ் முனிவன் தமிழ் நாடு பெற்ற முதல மைச்சர்—எங்கள் அன்பு அண்ணாவுக்கு ஈழத்து ஆட்சி மன்றத்திலே அஞ்சலி செலுத்த விடமாட்டோம் என்று ஆர். ஜி. சேனநாயக்காவும் எஸ். டி. பண்டாரநாயக்காவும் குரல் கொடுத்து ஆறுகோடி தமிழ் இதயங்களையும் புண்ணாக்கி வேதனைப் படுத்தி, தமிழ் மண்ணுக்கும் தமிழன்னைக்கும் பெருத்த அவமானத்தை ஏற்படுத்திவிட்டனர். இவர்களுக்கு தமிழினத்தின் வீர வரலாறுகளை நினைவு படுத்துகிறோம்.

ஈழம் வாழ் தமிழினத்தின் இதயங்களிலிடங் கொண்ட அண்ணாவை, அவமதித்த சிங்கள இனவெறியர்கள், தமிழ் மண்ணிலே காலடியெடுத்து வைக்க அருகதையற்றவர்கள். இவர்களுக்கு தமிழரசு வாலிப முன்னணி தமிழினத்தின் சார்பில் பலத்த கண்டனத்தைத் தெரிவிக்கின்றது.

தமிழை பழித்த கனக விசயர் கல் சுமந்த வரலாற்றை ஆர். ஜியும், எஸ். டி. பண்டாவும் நினைவுபடுத்திக் கொள்ளட்டும்.

ஈழநாட்டு முப்பது இலட்சம் தமிழர்கள் இதயங்களையும் புண்படுத்திவிட்ட சிறுஞ் சிங்கள வெறியர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆரிய—சிங்கள இனவெறிக்கு இளந்தமிழர் கூட்டம் ஒருபோதும் அடங்கி விடாது என்பதை சிங்கள இன வெறியர் உணர்ந்து கொள்ளட்டும்.

---

## 'அடாத்தாக காடுவெட்டிய குற்றத்திலிருந்து பணக்காரன் தப்பிவிடுகிறான்

## ஏழை நீதிமன்றத்துக்கு இழுக்கப்படுகிறான்!

—இதுவா நீதி?'

## பாராளுமன்றத்தில் இரத்தினம் குமுறல்!

"காணியில்லாதவர்களுக்கே காணிகள் கொடுக்கப்படவேண்டும் என்ற ஒரு கொள்கையை இந்த நாட்டிலே நாம் கடைப்பிடிக்கவேண்டும். விசேட குத்தகைக்கோ, பணக்காரர்களுக்கோ காணிகளை கொடுப்பதை நிறுத்தவேண்டும்."

—இவ்வாறு இம்மாதம் 5ந் திகதி காணி அபிவிருத்திச் சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட திருத்தம் மீது பாராளுமன்றத்தில் பேசிய கிளிநொச்சி பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

திரு. இரத்தினம் தமது பேச்சின்போது குறிப்பிட்டதாவது:—

எனது தொகுதியில் காணி இல்லாத பல மக்கள் காடுகளை வெட்டிஇருக்கிறார்கள். காணி உள்ளவர்களும் மத்திய தர வகுப்பினரும் கூட இவ்விதம் காடுகளை வெட்டிக் காணிகளைக் கைப்பற்றி இருக்கிறார்கள். ஆனால், காணி உள்ளவர்களையும் எதுவுமே இல்லாதவர்களையும் இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒரே மாதிரியாக நடத்துவது சமுதாய நீதியாகமாட்டாது.

காணி இல்லாதவர்களுக்குக் காணியை முதலில் கொடுப்பதுதான் அரசாங்கத்தின் கடமையாக இருக்க வேண்டும். சட்டங்களில் விதி விலக்களித்து காணி இல்லாதவர்களுக்குக் காணிகள் கொடுக்கப்பட வேண்டும். சட்டம் கண்மூடிச் சட்டமாக இருக்கக்கூடாது.

காணி விடயம் சம்பந்தமாக அமைச்சரவைத் தீர்மானம் ஒன்றும் இருக்கின்றது. 1966ம் ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்திற்கு முன்னர் அடாத்தாகக் காடு வெட்டியவர்களுக்கு அக்காணிகளைக் கொடுத்து விடுவதென்றும் அதற்குப் பின்னர் காடுகளை வெட்டியவர்களுக்கு அந்தச் சலுகை இல்லையென்பதுமே அந்தத் தீர்மானமாகும். இந்தத் தீர்மானத்தைத் தழுவி காணி ஆணையாளரும் ஒரு சுற்றறிக்கையை விட்டிருக்கிறார். அந்த அறிக்கையிலே உள்ள ஒரு வாசகம் என்னவென்றால் அரசாங்க அதிபரோ அல்லது காணி ஆணையாளரோ சில விசேட சூழ்நிலையில் சில மக்களுக்குக் காணிகளைக் கொடுக்கலாம் என்பது. இதை எந்த அரசாங்க அதிபரும் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை.

### மூன்று காரணம்

எனது தொகுதியில் இன்று காணிப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது. 1966 ஆம் ஆண்டிற்குப் பின்னர் காடு வெட்டியவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்கள் வெட்டியதற்கு முதலாவது காரணம் காணி இல்லாதது. இரண்டாவது எப்பொழுது வெட்டினால் அந்தக் காணி தங்களுக்குக் கிடைக்கும்; எப்பொழுது வெட்டினால் கிடையாது என்பதை அறியாமல் இருப்பது. மூன்றாவது மற்றைய மக்களும் வெட்டுகிறார்களே என்று எண்ணி தாங்களும் வெட்டியது.

இப்பொழுது காணி வெட்டுவது நிறுத்தப் பட்டிருக்கி[illegible] காணி இல்லாவிட்டால் அரசாங்கத்திடம் காணியைக் கேளுங்கள்; முடிக்குரிய காணியை வெட்ட வேண்டாம் என்று தடுத்திருக்கிறோம்.

### காணி கொடுங்கள்

ஆனால் 1960 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்குப் பின் காணி வெட்டிய சொந்தக் காணி இல்லாத மக்கள் இன்று மிகவும் பரிதாபகரமான நிலைமையில் இருக்கிறார்கள். அதை நான் சென்ற வாரம் கூட அரசாங்க அதிபர் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். ஏழைமக்கள் காணி இல்லாத மக்கள் காணியை எப்பொழுது வெட்டியிருந்தாலும் அந்தக் காலத்தைத் நோக்காமல் காணி கொடுக்க வேண்டும் என்று நான் அவரிடம் கேட்டிருக்கிறேன். இதனை கௌரவ அமைச்சரவர்களுடைய கவனத்துக்கும் கொண்டு வருகிறேன்.



உண்மையில் காணி இல்லாத மக்கள் வெட்டியிருந்தால் அவர்களுக்கு காணி கொடுப்பது மிகவும் இன்றியமையாதது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அமைச்சர் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மிகவும் பரிதாபமான, மனம் வருந்தத்தக்க நிகழ்ச்சிகள் எனது தொகுதியில் நடந்துள்ளன.

### ரூ. 250 குற்றம்

காணி இல்லாத மக்கள் காணியை வெட்டியதற்காக அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு 250 ரூபா வரை குற்றம் விதிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டு வருடங்கள் சென்றாலும் இந்த 250 ரூபாவை அவர்களால் உழைக்க முடியாது. இந்த நிலை, ஏழைகளுக்குத் தொண்டு செய்கிறோம் என்று சொல்ல முடியாத நிலை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எனவே குற்றம் விதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களுடைய ஆண்டுக் கட்டணத்தை நிறுத்திவிட வேண்டும். வழக்கை நிறுத்தி காணிகளை ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டுமென அமைச்சர் கட்டளையிட்டார். ஆனால், அதை நடைமுறைப்படுத்த அரசாங்க உத்தியோகத்தர்களிடத்தில் தயவு தாட்சணியம் இல்லாதபடியால் வெறும் கண்மூடிச் சட்டங்களுக்கு மட்டும் இடம் கொடுத்து எனது முயற்சியையும் அமைச்சரவர்களுடைய கட்டளையையும் நல்ல முறையில் பயன்படுத்தாமல் விட்டு விட்டார்கள்.

உண்மையில் காணி இல்லாத மக்கள் 1966 ஆம் ஆண்டு ஒக்டோபருக்கு முன் வெட்டினார்களா இல்லவா என்பதைச் சொல்ல முடியாதிருக்கிறது. இருப்பினும் காணி இன்மையாலும் வேறு பலரும் வெட்டியபடியாலும் ஒரு கொட்டிலையாவது போட்டு வாழ்வோம் என்பதற்காக ஏழை மக்களும் காணியை வெட்டியிருக்கிறார்கள். அத்தகைய மக்களுக்குக் காணியைக் கொடுக்காமல் அவர்களை நீதிமன்றத்துக்கு இழுத்து 250 ரூபா குற்றம் போடச் செய்வதால் அவர்களிற் பலர் மறியலுக்குப் போக வேண்டிய நிலைதான் ஏற்படும்.

எனவேதான் நான் அமைச்சரவர்களை, என்னுடைய தொகுதியில் காணி இல்லாத, படிப்பறிவு குறைந்த ஏழை மக்களின் சார்பாக, காணியை அவர்கள் வெட்டியிருந்தால் அவர்கள் குடியிருப்பதற்காக ஒரு சிறு பகுதியைக் கொடுக்க வேண்டிய ஒழுங்குகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

### சூழ்ச்சிக்கு இடங் கொடேல்

எனவே, சட்டம் எப்படியிருந்தாலும், காணி இல்லாதவர்களுக்குக் காணி வழங்குவதுதான் அரசாங்கத்தின் கொள்கையாக இருக்க வேண்டுமே தவிர காணி உள்ளவர்கள் பலவித சூழ்ச்சிகளைச் செய்து காணியைப் பிடிப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது. நாங்கள் காணி உள்ளவர்களுக்குக் காணி கொடுங்கள் என்று அரசாங்கத்தைக் கேட்கவில்லை. அப்படிக் கேட்பது எங்களுடைய நோக்கமும் அன்று.

---

### கருணாநிதியின்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மன்னன் அன்பை மிகையாய்ப் பெற்றான்
மன்றையில் தேறலும் அதிகம் பெற்றான்
மாண்டனன் போரில்; புகழ்
பூண்டனன் எனும் காட்சி
கண்டிடல் அரிதோ எனக்
கலங்கினேன் அம்மா:
தவறா?'' என்றாள்.
அந்தத் தாயாக நான் இல்லையே என்று
அகமிக நொந்தாள் ஔவைப்பிராட்டி!

ஃ ஃ ஃ

வெள்ளை வெள்ளாட்டுச் செச்சை போலத்
தன்னோ நன்ன விளைய ிருப்பப்
பலர்மீது நீட்டிய மன்றையென்
சிறுவனைக்
கால்கழி கட்டிலிற் கிடப்பித்
தூவெள் ளறுவை போர்ப்பித் திலதே.

—புறம்—286—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜி இப்படித்தான்...!

## அவரது மனைவி கமலா சொல்கிருர்

காலையில் எழுந்து ஸ்டுடியோவுக்குக் கிளம்புவதற்குள் குறைந்தது நூறு தடவையாவது 'அம்மா' என்று அழைத்துவிடுவார். ஆமாம், என்னை அவர் அழைப்பது 'அம்மா' என்றுதான். இன்னும் பல தடவை அழைக்க மாட்டாரா என்று இருக்கும் எனக்கு.

அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு, மஞ்சள் குங்குமம் துலங்கும் முகத்துடன் அவரை நான் எழுப்புவதைத்தான் அவர் பெரிதும் விரும்புகிருர்; அவரை மகிழ்விப்பதுதானே என் கடமை. வேலைக்கு (அவர் படப்பிடிப்புக்குப் போவதை அப்படித்தான் சொல்லுவார்) புறப்படு முன்னர் என் கையால் ஒரு டம்ளர் மோர் வாங்கிக் குடித்துவிட்டுத்தான் கிளம்புவார்.

அவருக்கு ஒரு டம்ளர் மோர் என் கையால் கொடுப்பதுடன் திருப்திப்பட வேண்டியிருக்கிறது. அருகிலிருந்து நன்கு உபசரித்து உணவு பரிமாறும் பாக்கியம் எனக்குக் கிட்டுவதே இல்லை. காரணம், பாதி நாட்களுக்குச் சாப்பாடு ஸ்டுடியோவுக்குப் போய்விடும். வீட்டுக்கு வருகிற நாட்களில் கூடவே பத்துப் பேராவது சாப்பாட்டுக்கு வருவார்கள்.

அவர்களில் பலர் அன்னியர்களாகவே இருப்பார்கள்.

மனைவி இருக்க வேண்டிய இடம் வீடு என்பதே என் அபிப்பிராயம்.

தனது நண்பர்களிடம், 'அவளுக்கென்ன தெரியும்' என்று என்னைப் பற்றிச் சொல்லுவாரே தவிர, என் மீது அவருக்கு அபார நம்பிக்கை. அதற்கு அடையாளம் கொத்துச் சாவி என் இடுப்பில்.

அவர் நடிக்கும் எந்தப் படத்திற்காக வெளியூர் போனாலும் சரி என்னைக் கூட அழைத்துப் போகத் தவறுவதில்லை, குழந்தைகளுக்கு விடுமுறை சமயமானால் குழந்தைகளும் எங்களுடன் வருவார்கள்.



வீடு தேடி வருகிறவர்களை வெறும் வயிற்றுடன் அனுப்பக் கூடாது என்பது அவர் கட்டளை. சாப்பாட்டு நேரமானல் சாப்பாடு போட்டு அனுப்ப வேண்டும் மற்ற நேரமானல் காப்பியாவது கொடுத்துஅனுப்ப வேண்டும். இதில் தவறி விட்டால் அவருக்கு வரும் கோபம்... அப்பப்பா...!!

அவருக்கு நான்கு குழந்தைகளில் எல்லோர் மேலும் சமமான பிரியம் தான். சாந்தா, ராம்குமார், பிரபுராம், தேன்மொழி இவர்களோடு அவர் உல்லாசமாக வீட்டில் இருப்பதை மிகவும் விரும்புவார். ஆனல் நேரமிருப்பதில்லையே.

# திரைவாணன் பதில்கள்

எஸ். ராஜன்,
கிண்ணியா.

கே: எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவுடைய அம்மா சந்தியாவுடன் ஏதேனும் படங்களில் நடித்துள்ளாரா?

ப: இல்லை!

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: நடிகை வாணிஸ்ரீ திருமணமானவரா? இவரின் முகவரி என்ன?

ப: திருமணமாகாதவாணிஸ்ரீயின் முகவரி பெயருடன் மகாலிங்கபுரம் சென்னை 34.

ஃ

'சங்கர்'
கம்பளை.

கே: முதன்முதல் பானுமதியுடன் சிவாஜி கணேசன் ஜோடி சேர்ந்து நடித்த படம் எது?

ப: மக்களைப் பெற்ற மகராசி!

ஃ

தாளையூர் முருகுப்பிள்ளை,
தாழங்குடா.

கே: கே. ஆர். விஜயா இதுவரை நடித்த படங்களில் அவருக்குப் பிடித்தது எதுவாம்?

ப: இதயகமலம் என்று அண்மையில் அளித்த பேட்டியொன்றில் கூறியிருக்கிருர்.

ஃ

கலைச்செல்வன்,
ஏழாலை.

கே: காதல் மன்னன் ஜெமினி கணேசன் என்ருல் காதல் நடிகை யார்?

ப: கே. ஆர். விஜயா.

ஃ

தர்மராசா,
கரவெட்டி.

கே: எம்.ஜி.ஆர். நடித்த நூறு படங்களில் நூறுநாள் ஓடிய படங்கள் எவை?

ப: அசோக்குமார், ராஜகுமாரி, மோகினி, மந்திரிகுமாரி, சர்வாதிகாரி, மர்மயோகி, மலைக்கள்ளன், அலிபாபாவும் 40 திருடர்களும், மதுரை வீரன், நாடோடி மன்னன், திருடாதே, தாயைக் காத்த தனையன், தாய் சொல்லைத் தட்டாதே, நீதிக்குப் பின் பாசம், பெரிய இடத்துப் பெண், பணக்காரக் குடும்பம், தெய்வத்தாய், வேட்டைக்காரன், ஆயிரத்தில் ஒருவன், படகோட்டி, முகராசி, அன்பே வா, காவல்காரன், பெற்ருல்தான் பிள்ளையா, குடியிருந்த கோயில், ஒளிவிளக்கு ஆகிய 26 படங்கள் நூறு நாள் ஓடின.

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை-மேற்கு.

கே: ஜெய்சங்கருக்கு சண்டைக் காட்சியில் நசுப்பதையும், காதல் காட்சியில் கட்டிப் பிடித்து நடிப்பதையும் தவிர வேறு ஒன்றும் தெரியாதா?

ப: நீங்கள் குழந்தையும், தெய்வமும் பார்க்கவில்லையா? அதில் சண்டையும் கட்டிப்பிடிக்கும் காதலும் இல்லையே?

ஃ

கே: இலங்கை வாசிகள் சிவாஜிக்கும் எம்.ஜி.ஆருக்கும் வேற்றுமை உண்டு என்கிருர்களே? உண்மையா?

ப: உண்மைதான். எம்.ஜி. ஆர். 1932ல் இருந்து நடித்து வருகிருர். சிவாஜி 1952-ல் தானே நடிக்க வந்தார். இது பெரிய வேற்றுமை தானே?

ஃ

பொ. தங்கம்,
ஆரையம்பதி-7.

கே: எம். ஜி. ஆருக்கு எத்தனை மனைவிகள் உண்டு?

ப: படங்களிலா நிஜவாழ்க்கையிலா? நிஜவாழ்க்கையில் என்ருல் ராமச்சந்திரனுக்கொரு ஜானகியே இருக்கிருர்!

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: 'என் தம்பி' படத்தில் சண்டைக் காட்சிகளில் நடிப்பது உண்மையிலேயே சிவாஜிதான அல்லது வேறு யாராவது 'டூப்' நடிகரா?

ப: சிவாஜியேதான்!

திரைவாணன்
சுதந்திரன்
கலைப் பூஞ்சோலை
த. பெ. இல. 1183
கொழும்பு.

# எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த மண்குடிசையை அடைந்ததும் வெளிமுற்றத்தில் கையால் இழைக்கப்பட்ட ஒரு ஒற்றை ஓலைப் பாயை விரித்து அதில் ரகுவையும் பவானியையும் அமரும்படி பணித்துவிட்டு அந்தக் குடிசைக்குட் சென்ற சில நிமிடங்களுக்கெல்லாம் அதற்குள் இருந்து வெளிப்பட்ட ஓர் வயோதிபர் அவர்கள் பக்கத்தில் வந்து "வணக்கம் தம்பி! புனிதம் என் கிட்ட எல்லாம் சொல்லிச்சு. நாங்க ஏழைகள்; சேரி வாசிகள். எங்களால் ஆன உதவியைச் செய்யறம். நீங்கள் விரும்பும்வரை இங்கு தங்கியிருக்கலாம் அப்பா" என்று கூறிக்கொண்டே அவர்கள் பக்கத்தில் அமர்ந்துகொண்டார்.

சுற்றிவர வெயில் அனலாகக் கொழுந்திக்கொண்டிருந்தது. அவர்கள் இருந்த இடத்தில் தாவாரம் திறக்கப்பட்டிருந்ததால் வெயில் அவர்கள் மீது படவில்லை. ஆயினும் உஷ்ணத்தைத் தாங்கமுடியாமல் இருந்தது. மாரி காலத்திலும் இங்கு வெயில் அதிகமாக்கும்... ரகுவே பேச்சை ஆரம்பித்தான். ஆமாம் தம்பி! இங்கு நினைத்த நேரம் மழை பெய்யும் 'திடீர்' என வெயில் எறிக்கும் எங்களுக்கு எல்லாம் பழக்கமாய்விட்டது. காலையில் மட்டும் சரியான குளிரடிக்கும். அதுதான் எனக்கு ஒத்துக்கொள்ளாது. இன்று காலையில்கூட எனக்கு ரொம்ப இழுக்கத் தொடங்கிவிட்டது. அதனுல்தான் புனிதங்கூட இன்று இவ்வளவு சுணங்கி கீரை விக்க வந்திடிச்சு அல்லது விடியக்காலைக்கே போயிட்டு இந்நேரம் எல்லாம் வீட்டுக்கு வந்திடும். சமைக்கணும் அல்லவா...? பாவம்... அதுக்கு என்னைக் கட்டிய நாளில் இருந்து சதா கஷ்டந்தான். நம்ம பிள்ளைங் சிறுவயசா இருக்கிறப்போ நான் கண்ட பாட்டுக்கு குடிச்சிட்டுத் திரிந்தன். அப்பவும் இந்தத் தொழிலைப் பார்த்து அது தான் வீட்டைக் காப்பாற்றிச்சுது. பிள்ளைங்க பெரிதாகியதும் நம்மைக் காப்பாற்றுங்கள் என்று மனப்பால் குடிச்சம். இரண்டும் ஆண் குழந்தைகள். அதுகள் வளர்ந்தாப்பல தங்க விருப்பத்துக்கு இரண்டு மனைவிமாரைப்பிடிச்சுக்கிட்டு தங்க பாட்டுக்குக் களந்திட்டாங்க. இப்ப திரும்பவும் புனிதந்தான் நம்ம குடும்ப விளக்கு அணையாம காப்பாற்றிக் கிட்டிருக்கு." என்று கூறி முடித்ததும் லொக்கு லொக்கு என்று இருமத் தொடங்கினர் அவர்.

அவர் பேச்சில் இருந்து அவர்தான் புனிதத்தின் கணவன் என்று அறிந்து கொண்டான் ரகு. அதற்குள் அவர் இருமும் சத்தங் கேட்டு வெளியே வந்த புனிதம் "என்னவாந் தம்பி...பேசினதெல்லாம் நான் கேட்டுக் கிட்டுத்தான் இருந்தன். இந்த வேதாந்தமெல்லாம் இப்பா பேசி என்ன செய்ய முடியும்...? இரத்தத் திமிரில இராப் பகலா குடிக்சுக் கிட்டிருக்கிறப்ப யோசித்திருக்க வேண்டும் இல்லையா தம்பி...? இப்படித்தான் ஏதாவது அதிகமாகப்பேசினு இந்த இருமல் அவரைப் பாடாய்ப் படுத்தி விடும். 'உம்' எழுந்திருங்க உள்ளே படுக்கை விரிச்சிரிக்கு போய் படுத்துத் தூங்குங்க...தம்பி நீயும் தங்கச்சியைக் கூட்டிக்கிட்டு உள்ளபோய் கொஞ்சம் படுத்து ஆறு...என்று கூறியபோது பணம் படைத்த பங்களா வாசிகளுக்கு ஏன் இந்த பரந்த மனப் பான்மை வரமாட்டேன் என்கிறது என்று ஏகாம்பரத்தை எண்ணிக் கொண்டே ரகு எழுந்திருக்கக்கூடவே பவானியும் எழுந்துசென்ருள்.

ரகு புனிதத்திடம் பவானி தன் சொந்தத் தங்கை என்றும் திருமணமாகிய ஆறும் மாதம் அவள் கணவன் அவளைக் கைவிட்டுச் சென்று விட்டதால் ஊரில் தலைகாட்ட முடியாமல் மானம் ஒன்றே பெரிதென மதித்துத் தாங்கள் கொழும்புப் பட்டணம் பிழைக்க வந்ததாகவும் கூறியிருந்தான். ஆகவே தான் அவர்கள் இருவரும் எதிர் வார்த்தை பேசவில்லை. இரத்தத்தால் ஒன்றுபடாவிட்டாலுங் கூட உள்ளத்தாலும் உணர்வாலும் ஒன்றுபட்ட அவர்களிடையே எந்தவித வேற்றுமைக்கும் இடமிருக்கவில்லை. அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் இரண்டு பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன. அவற்றிற்குத்தான் அந்த இடம் போதுமானதாக இருந்தது. சிறிய கோழிக் கூடு போன்ற அறையாக இருந்தபோதும் அதன் புனிதம் ரகுவை மிகவும் கவர்ந்தது. சுவரில் ஒரு முருகன் கலெண்டரும் பக்கத்தில் பத்திரிகையில் வெட்டப்பட்ட சத்தியசாயிபாவாவின் படம் ஒன்றும் ஒட்டப்பட்டிருந்தது. தரையில் ஒரு மூலையில் ஒரு விளக்குமாறும் கைவிளக்கொன்றும் இருந்தன.

பவானியை சிறிது நேரம் படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளும்படி கூறிய ரகு வெளியே சென்று உலாவப் புறப்பட்டபோது, 'ராமுத்தம்பி எங்கே போகிறீர்கள்? என்று எதிரேவந்து கொண்டிருந்த புனிதங் கேட்க ரகு அப்படியே நின்ருன். தன் பெயரை அவன் அவர்களுக்கும் ராமுஎன்றே அறிமுகபடுத்தியிருந்தான். ரகு புனிதத்தை ஆச்சரியத்துடன் பார்த்தபோது அவள் கையில் இருந்த சிமெந்துப் பைக்கட்டையும் ஒரு சட்டி பசையையுங் கொடுத்து 'வாங்க தம்பி இதை வெட்டிச் சிறிய பைகள் சரிக்கட்டிக் கொடுத்தா ஒன்றுக்கு மூன்றுசதங் கூலிகிடைக்கும். ஓய்வு நேரத்தில் மட்டும் நான் இத்தொழிலைச் செய்வதுண்டு. இனி உங்களுக்கு ஓய்வு கிடைக்கும் நேர இதைத் தொழிலாக்கிக் கொள்ளுக என்று கூறிய போது ரகு வாயடைத்து நின்ருன்.

—வளரும்

# புதிய மாற்றத்திற்கு தாம் தயார் என்கிருர் இலட்சிய நடிகை!

"புதிதாக பிறந்துள்ள இந்த 69ம் வருடம் என்னைப் பொறுத்தவரை அதிஷ்டமிக்க வருடமாக இருக்கும் என்று என் உள்ளுணர்வு எனக்கு சுட்டிக்காட்டி விட்டது. சின்ன வயதிலேயே எனக்கு நடிகையாக வேண்டும் என்ற ஆசை இருந்தது. நான் வளர வளர அதுவும் கூடவே வளர்ந்தது. அந்த ஆசை நிறைவேறிவிட்டது.

இன்று நான் ஒரு நடிகை. தமிழகத்தில் நிரந்தர நடிகைகளில் நானும் ஒருத்தி. இப்படி ஒருநிலை ஏற்படும் என்று சின்ன வயதிலேயே தெரிந்ததால்தான் நான் இந்த முயற்சியில் இறங்கினேன். வெற்றியும் பெற்றேன்.

இந்த ஆண்டு ஒளிமயமான வருடமாக இருக்கும் என்பதை நான் உணர்கிறேன், இதுவரை என் வாழ்க்கையில் ஏற்படாத மாபெரும் வளர்ச்சி இக்காலத்தில் ஏற்படும் என்ற நம்பிக்கை உள்ளது. அதற்கான அறிகுறிகள் இப்போதே தலை நீட்டத் துவங்கி விட்டன.

அந்த நல்ல மாற்றத்திற்கு என்னை நான் தயாராக்கிக் கொண்டுள்ளேன். நிச்சயமாகச் சொல்வேன், இந்த வருடம் எனக்கு அதிஷ்ட வருடம்என்று.

6-வது வாரமாகக் காண்பிக்கப்படுகிறது

தினமும் 2, 6, 9-30 மணி.

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்)



ஸ்ரீதரின் 100 நாள் விழாக் கொண்டாடிய மற்றொரு அழகிய ஈஸ்மன் கலர் சித்திரம்

★ சிவாஜி கணேசன், கே. ஆர். விஜயா, எல். விஜயலக்ஷ்மி, முத்துராமன், குமாரி சச்சு, வி. கே. ராமசாமி, நாகேஷ், பாலையா — நடித்த —

# ஊட்டி வரை உறவு

(பாஸ்கள் சலுகைகள் ரத்து)

இப்பொழுது காட்சியளிக்கிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு)
மோடேன் (பண்டாரவளை) ஸ்ரீகிருஷ்ண (திருமலை) விஜிதா (அட்டன்)

பானுமதி, நாகேஷ், முத்துராமன், ரங்காராவ் மற்றும் பலர் நடித்த



# பூவும் பொட்டும்

சிலோன் என்டடெயின்மென்சாரின் அடுத்த வெளியீடு!



* ஜெய்சங்கர் * எல். விஜயலட்சுமி, நாகேஷ் அசோகன், பண்டரிபாய் —நடித்த

பவித்ரா பிலிம்ஸ்,

# அன்பு வழி

டைரக்ஷன்: நடேசன்

இசை: மெல்லிசை மன்னர் எம். எ. விஸ்வநாதன்

2-வது வாரமாக இப்பொழுது காட்சிதருகிறது!

**சென்ட்ரல்** (மருதானை)

சாவித்திரி, நாகேஸ்வரராவ், ரங்கராவ், நம்பியார் —நடித்த

# தேவதாஸ்

4-வது ஹாஸ்ய வாரம்!

கெயிட்டி (கொழும்பு) ஹரிசன் (கல்முனை) வின்சர் (யாழ்நகர்) பிறின்செஸ் (அட்டன்) சுராங்கனி (கொச்சிக்கடை)

* முத்துராமன் * நாகேஷ் * ராஜ்ஸ்ரீ * ஜயபாரதி



நடிக்கும்

# அனுபவி ராஜா அனுபவி

8-வது ஜனத்திரள் வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) தாஜ்மகால் (மாத்தளை)
ஜசிமா (கிராண்பாஸ்) மகாத்மா (நெல்லியடி)
லிபேட்டி (பதுளை) இம்பீரியல் (பாணந்துறை)

★ எம். ஜி. ராமச்சந்திரன்,
* ஜெயலலிதா,
● நம்பியார்
● ராஜ்ஸ்ரீ
மற்றும் பலர் நடிக்கும்

# குடியிருந்த கோயில்

(ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில் 1969-வருடம் மார்ச் மாதம் 18-ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி:23411